# வானவில்

**VAANAVIL**

| இதழ் 104 | ஆவணி | 2019 |
|---|---|---|
| ISSUE 104 | AUGUST | 2019 |


# நாட்டுக்கு உறுதியான அரசொன்று தேவை




இலங்கை இன்று பல்வேறு பிரச்சினைகளின் குவிமையமாக மாறி யுள்ளது.

விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு, இலஞ்சம் ஊழலின் அதிகரிப்பு, அதிகாரத் துஸ்பிரயோகம், பொதுச் சொத்துகள் தனியார்மயமாக்கம், வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடுகள் அதிகரிப்பு, அரசாங்கத்தின் செயலற்ற தன்மை என இவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம்.

நாட்டு மக்கள் அனைவரும் பொதுவாக எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகள் ஒருபக்கம் இருக்க, வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் எதிர்நோக்கும் பிரத்தியேகப் பிரச்சினைகளும் இருக்கின்றன.

குறிப்பாக, வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். சுமார் 30 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இம்மக்கள் 10 வருடங்களுக்கு முன்னர் 2009 மே மாதத்தில் யுத்த அவலத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட போதிலும் இவர்களது அன்றாட பிரச்சினைகளே இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளது.

இதுதவிர, இவர்களது அரசியல் தலைமை தற்போதைய அரசாங்கத்துடன் கடந்த நான்கு வருடங்களாக கூடிக்குலவி வருகின்றபோதும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இனத்துவம் சம்பந்தமான பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படாமலே உள்ளன.

மாகாண சபைகள் இயங்கிய போதிலும் அவைகளுக்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இப்பொழுது அந்த மாகாண சபைகளும் காலாவதியான நிலையில் அவற்றுக்கான தேர்தலையும் நடத்தாமல் அரசாங்கம் பல்வேறு சாக்குப்போக்குகளைச் சொல்லி இழுத்தடித்து வருகின்றது.

கடந்த அரசாங்க காலத்தில் வடக்கு கிழக்கில் ஓரளவு அபிவிருத்தி வேலைகள் துரிதகதியில் நடைபெற்ற போதிலும், தற்பொழுது எந்திவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையே உருவாகி இருக்கின்றது.

இதுதவிர வேலைவாய்ப்பு விடயங்களிலும் பாகுபாடு காண்பிக்கப்படும் நிலை தொடர்கின்றது. இதனால் வேலையற்ற இளைஞர்கள் வன்முறைக் கலாச்சாரத்தில் ஈடுபடும் நிலை தோன்றியுள்ளது.

இப்படியான பொதுவானதும் குறிப்பானதுமான நிலைமைகள் ஒருபுறமிருக்க, இந்த நிலைமைகளுக்கு எல்லாம் அடிப்படையாக நாட்டின் அரசியல் உறுதியற்ற தன்மையே பிரதான காரணமாக அமைந்திருப்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

ஒரு நாடு வளர்ச்சிப் பாதையில் உறுதியாக முன்னேற வேண்டுமானால் அந்த நாட்டில் அரசியல் உறுதிப்பாடு இருப்பது அவசியமானது. ஆனால் துரதிஸ்டவசமாக 2015 ஜனவரிக்குப் பின்னர் அந்த நிலைமை எமது நாட்டில் இல்லாமல் போய்விட்டது.

அதன் காரணமாக நாட்டில் பயங்கரவாதச் செயல்கள், போதைவஸ்து பாவனை, குற்றச்செயல்கள், ஊழல் மோசடிகள் பெரும் அளவில் தலைவிரித்தாடுகின்றன. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் சில இஸ்லாமிய பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களும், அதனால் பல மக்கள் இறந்தமையும் பெருமளவு மக்கள் காயமடைந்தமையும் இதற்கு உதாரணம்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு ஏகாதிபத்திய மேற்குலக சக்திகளே துணைபுரிந்தன. அவற்றின் ஆலோசனைகளுக்கு அமைவாக நாட்டின் பாதுகாப்புத்துறையை அரசாங்கம் பலவீனப்படுத்தியதினால் வந்த வினையே இதற்கான காரணம்.

30 வருட உள்நாட்டுப் போரால் சீரழிந்து போயிருந்த ஒரு நாட்டில் யுத்தம் முடிவடைந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பாதுகாப்புத்துறை பலமாகவும் விழிப்புடனும் செயல்பட வேண்டியது அவசியமானது. ஏனெனில் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட சக்திகள் மீண்டும்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# நீர் இன்றி அமையாது உலகு

மனிதனின் அன்றாட வாழ்கையில் தண்ணீர் அடிப்படைத் தேவையாக உள்ளது. அதேபோல் நீர் இல்லை என்றால் பூமியில் எந்த ஜீவராசிகளும் தாவரங்களும் வாழமுடியாது. ஒருவர் உணவின்றி ஒருமாதம் உயிர் வாழலாம். ஆனால் நீரின்றி ஒரு வாரத்திற்கு மேல் உயிர் வாழ முடியாது. ஒரு சராசரி மனிதன் தினமும் இரண்டரை லீட்டர் நீரை தனது உடலிலிருந்து வெளியேற்றுகிறான். எனவே மனிதன் சுத்தமான நீரை குடித்துக் கொண்டே இருக்க வேண்டும். இந்த பிரபஞ்சத்தில் பூமியில் மட்டும் தான் தண்ணீர் உள்ளது. அதாவது வேறு கிரகங்களில் தண்ணீர் இருப்பதாக இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை.

தண்ணீர் என்பது வெறும் நீரல்ல. அது நாகரிகம், பண்பாடு சம்பந்தப்பட்டது. உலக நாகரீகங்கள் எல்லாம், நீர் நிலைகளை ஒட்டியே தோன்றியது. நீரை அழிக்கிறோமென்றால், நாம் நாகரீகங்களை அழிக்கின்றோம் என்று அர்த்தம். தண்ணீர் இல்லை என்றால், பாரிய இடப்பெயர்வுகள் நடக்கலாம், யுத்தங்கள் கூட மூளலாம்.

உலக அளவில் 200 கோடி மக்கள் தண்ணீர் பற்றாக்குறையால் வாடுகின்றனர். ஒவ்வொரு நாளும் பல ஆயிரம் குழந்தைகள் நீர் சம்பந்தப்பட்ட நோயினால் இறக்கின்றனர். தென்அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் தெற்கு ஆசிய நாடுகளில் தற்போது தண்ணீர் பிரச்சனைகள் உள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. 1993ம் ஆண்டு ஐ.நா.வின் பொதுச்சபை மார்ச் 22ந் தேதியை "உலக நீர் தினமாக" அறிவித்தது.

பூமியில் 71 வீதம் தண்ணீர் தான். அதிலும் 97.5 வீதம் உப்பு நீரே. உப்பு நீரைக் குடித்தால் மனிதனின் உடம்பில் இருக்கும் தண்ணீரும் உலர்ந்து, வற்றிப்போய் மரணிக்கும் சூழல் வரலாம். அதுபோலவே பெரும்பாலான ஜீவராசிகளுக்கும் தாவரங்களுக்கும் உப்பு நீர் என்பது ஒவ்வாதது. உப்பு நீரைச் சுத்திகரித்து நன்னீராக்கலாம். ஆனால் அது மிகவும் கடினமான வழிமுறை, அத்துடன் அதிக செலவுமாகும். உப்பு நீர் போக, நல்ல தண்ணீராக இருக்கும் 2.5 வீதத்தில், 70 வீதம் பனிக்கட்டியாக உள்ளது. எனவே இதனை உடனடியாக குடிநீராகப் பயன்படுத்த முடியாது. இந்த பனிக்கட்டிகளும், அதிகரிக்கும் சூழல் வெப்பநிலையால் உருகி கடல் நீரில் சேர்ந்து கொள்ளும் வாய்ப்புகளே அதிகமாக உள்ளது. மீதமாகவுள்ள 30 வீததத்தில் 29 வீதம் நிலத்தடி நீராகவே இருக்கின்றது. நிலத்தடி நீரைப் பெறுவது எவ்வளவு கடினம் என்று என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இதில் ஒரு சதவீதம் மட்டுமே பூமியின் மேற்பரப்பிலுள்ள நன்னீர் ஏரிகள், ஆறுகள், குளங்களாக இருக்கின்றன. அதாவது மொத்த நீரின் அளவிலிருந்து 0.025 வீதம் மட்டுமே எமக்கு நேரடியாக பயன்படக் கூடியதாகவுள்ளது.

மக்களுக்கு சுத்தமான குடிநீரை இலவசமாக வழங்க வேண்டியது அரசின் சமூகக் கடமை என்பது தான் இதுவரையிலும் இருந்து வந்த பொதுவான கருத்து. ஆனால், தற்போது அப்படி ஒரு கடமையை அரசு சுமக்கத் தேவையில்லை என்கிற கருத்து முதலாளித்துவ சக்திகளால் உருவாக்கப்பட்டு, பரப்பப்பட்டும் வருகின்றது. சமீபத்தில், பன்னாட்டு நிறுவனமான நெஸ்லேயின் (Nestle) தலைவர் பீட்டர் பிராபெக் (Peter Brabeck) ஆவணப்படம் ஒன்றிற்கு பேட்டியளிக்கையில், தண்ணீர் அடிப்படை மனித உரிமைகளின் கீழ் வராது என்றும், இது மற்ற உணவுப் பண்டங்களைப் போன்று விற்பனைச் சரக்காக மாற்றப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார். தண்ணீர் ஒரு முக்கியமான கச்சாப் பொருள் என்றும், மற்ற பண்டங்களுக்கு இருப்பதைப் போலவே இதற்கும் ஒரு சந்தை மதிப்பு இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கணிப்பொன்று, எதிர்காலங்களில், ஒவ்வொரு தனிமனிதனும், தன்னுடைய வருமானத்தில், 10 சதவீதம் வரை, தண்ணீருக்காகச் செலவிடும் நிலை ஏற்படக் கூடுமெனத் தெரிவிக்கின்றது. பணம் கொடுத்தால் மனிதனுக்கு குடிநீர் கிடைத்துவிடும் என்றால், பூமியில் உயிர்வாழும் ஜீவராசிகளினதும் தாவரங்களினதும் கதி என்னவாகப்போகின்றது?

குடிநீர்ப்பிரச்சனை என்பது யாழ் குடாநாட்டில் முக்கிய சவாலாக இருக்கிறது. இலங்கையில் 25 மாவட்டங்கள் இருக்கின்ற போதிலும், ஆறோ நதியோ ஓடாத ஒரேயொரு மாவட்டம் என்றால், அது யாழ் மாவட்டம் மட்டும் தான். யாழ் மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தீவகம், தென்மராட்சி, யாழ்ப்பாணம் நகர் போன்ற இடங்களில் நீர்ப்பிரச்சனை உண்டு. இங்கே நல்ல தண்ணீரைப் பெறுவதற்காகத் தலைமுறை தலைமுறையாக மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

யாழ் குடாநாட்டில் வருடாந்தம் 1200 மில்லி மீட்டர் மழை பெய்கின்றது. குடாநாட்டு நிலப்பரப்பு ஏறத்தாள நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டிருப்பதால் இயற்கையாகவே பெரும்பகுதி மழைநீர் கடலுக்கு செல்கின்றது. குடாநாட்டில் பெய்யும் இந்த மழை வீழ்ச்சியில் 50 வீதத்தினையாவது சேமித்து வைக்கக்கூடிய வழிவகைகள் ஏதுமில்லை. மழை நீரை சேமித்து வைப்பதற்கு குளங்களையே எமது முன்னோர்கள் பயன்படுத்தி வந்தனர். ஆனால் யாழ் குடாநாட்டிலுள்ள பல குளங்கள் பராமரிக்கப்படாமலும், வரண்டும், தூர்ந்தும் காணப்படுகின்றன. இந்த ஒவ்வொரு குளமும், 500 மீட்டர் சுற்றளவில் உள்ள கிணறுகளில், நீர்வளத்தைப் பெருக்கும் தன்மை கொண்டவை என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாது. இதனால் கிராமங்கள் அளவில் ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளை, சரியாக பராமரித்து வைப்பது, அவற்றினை தூர்வாருவது, அவற்றிற்கு நீர் கொண்டுவரும் வாய்க்கால்களில் மிதமிஞ்சி வளர்ந்திருக்கும் செடிகொடிகளை அகற்றுவது, போன்ற பணிகளை சிரமதான அடிப்படையில் செய்ய நாங்கள் முன்வரவேண்டும்.

நிலத்தடி நீரில் பற்றாக்குறை ஏற்படுவதினால் ஏராளமான பிரச்சனைகள் எழலாம். இது முதலில், கிணற்று நீர்ப்பாசனத்தை நம்பியுள்ள விவசாயத்தையே அதிகம் பாதிக்கும். இரண்டாவது, நீர்த்தேவை அதிகமாக உள்ள தொழில்களை நசிவடையச் செய்யும். பல சிறிய தொழிற்சாலைகள் நிலத்தடி நீரை மாத்திரமே நம்பியிருக்கின்றன. மூன்றாவதாக, கிராமங்களிலும் சிறிய நகரங்களிலும் குடியிருக்கும் மக்கள் தங்கள் குடிநீர்த் தேவைக்கு நிலத்தடி நீரையே நம்பியிருப்பதால், அது கிடைக்காதபோது, இடம்பெயரும் நிலைக்குத் தள்ளப்படுவர். நான்காவதாக, நீர் இல்லையேல் சுற்றுச்சூழல் மாசடையும். சரியான விவசாயமும், தொழிலும், மக்கள் நடவடிக்கைகளும் இருந்தால்தான் ஒரு பகுதி சுத்தமாக இருக்கும். இல்லாவிடில் அந்தப் பகுதி தரிசாகப்போய், பாழடைந்து பாலைவனமாகும். இத்தகைய நிலைகளுக்கு நாம் தள்ளப்பட வேண்டுமா என்பது குறித்து சிந்திப்போம்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்


**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன் அவர்கள் பிறந்த 100 ஆவது (1919 – 2019) ஆண்டையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது

# மு.கார்த்திகேசன் - சில நினைவுகள்

**செ**ன்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கைத் தமிழர் சமுதாயத்தில் நேர்ந்ததொரு சிந்தனை விழிப்புக்கு, கல்வியாளரும், அரசியல் அறிஞரும், வரலாற்று வல்லுனருமாகிய சிலர் பெரிதும் உதவியுள்ளனர். அவர்களுள் மு.கார்த்திகேசன் அவர்கள் விதந்து பேசத்தக்க ஒரு பெருமகனாகத் திகழ்ந்துள்ளார்.

ஆசிரியர் கார்த்திகேசன் என்றவுடன் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முற்பட்டதொரு காலகட்டத்துக்கு என் நினைவு பின்னோக்கிச் சென்று நிலைக்கிறது. அப்பொழுது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலே நான் படித்துக்கொண்டிருக்கிறேன். அக்கல்லூரியின் ஆசிரியர் குழாத்தில் ஒளி வீசிக்கொண்டிருந்த ஓர் ஆங்கில மொழி இலக்கியக் கல்விமானாகவே அவரை நான் அறிந்து கொள்கிறேன்.



படிப்படியாக வகுப்பேற்றம் பெற்று, சிரேஸ்ட – உயர்தர வகுப்புகளுக்குச் சென்ற பொழுதுதான், கார்த்திகேசனின் ஆளுமையையும் பண்புகளையும் சிறிது சிறிதாக அறிந்துகொள்வது இயலுமாயிற்று. அப்பொழுது நான் கணிதம், பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களைத் தான் தெரிந்தெடுத்துப் படித்துக்கொண்டிருந்தேன். ஆதலால் அவர் எனக்கு வகுப்பாசிரியராக அமையும் வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை. எனினும், சற்றுத் தூர இருந்து அவர் பரப்பிக்கொண்டிருந்த கருத்துகளின் வெளிச்சத்தை உணர்ந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது.

அன்றைய காலகட்டத்தில், யாழ்.இந்துக்கல்லூரியில், வகுப்பறைக்கும் அப்பாலான செயற்பாடுகளுக்கு அனுசரணையாகத் தொழிற்பட்ட ஆசிரியர்களுள், வித்துவான் க.கார்த்திகேசு, திரு.வை.ஏரம்பமூர்த்தி, திரு.வி.அற்புதரத்தினம், திரு.ஏ.எஸ்.கனகரத்தினம், திரு.அ.சரவணமுத்து போன்றோர் மாணவர்களுடன் கொண்டிருந்த தொடர்பு அதிகமாய் இருந்தது. பொதுவுடைமைவாதி என்று நன்கு அறியப்பட்ட திரு.அ.வைத்திலிங்கம் எனக்குத் தூய கணிதம் படிப்பித்திருக்கிறார். ஆனால், வகுப்பறையில் அரசியல் பேசுகிற வழக்கம் கடுகளவேனும் அவரிடம் இருக்கவில்லை. மாணவர்கள் விரும்பி அவருடன் ஏதும் கதைவிட்டுப் பார்த்தாலும் கூட, வகுப்பறையிலே கணிதம் தவிர வேறு எது பற்றியும் அவர் பேசுவதில்லை.

இ.முருகையன்

ஆனால், கார்த்திகேசன் அவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர். அவர் அடிப்படையில் ஓர் ஆங்கிலமொழி ஆசிரியரே ஆயினும், பேச்சரங்கு, சொற்போர் அரங்கம், கட்டுரையாக்கம் முதலிய பல்வேறு வகையான பொதுப்புலமை முயற்சிகளிலும் மாணவர்களுக்கு உறுதுணையாய் இருந்தார். அதனால், அறிவு விழிப்புக்கு உதவும் பகுத்தறிவுப் பார்வையையும் தருக்கவழிச் சிந்தனையையும் சமகால உணர்வையும் ஊட்டிவிடும் வாய்ப்பும் திறமையும் அவரிடம் பிரகாசித்தன.

அந்தக் காலத்திலே, அவர் ஆசிரியராய் இருந்த அதே வேளையில், யாழ்ப்பாண முனிசிப்பல் கவுன்சிலுக்கான தேர்தல்களில் போட்டியிடும் ஒரு வேட்பாளராயும் அவர் விளங்கினார். அரசியல் ஈடுபாடு என்னும் மற்றுமொரு பரிமாணமும் அவருக்கு இருந்தது. இதனை ஒட்டியும் பிற தேவைகளின் பொருட்டும் துண்டுப் பிரசுரங்களையும், அரசியல் விளக்கக் குறிப்புகளையும் அவர் எழுதி வெளியிட்டதுண்டு. இதனால், அவர்தம் கொள்கையினாலே கவரப்பட்ட மாணவர்கள் அவருடன் உரையாடித் தம் அறிவுநிலையைச் செம்மைப்படுத்தும் வாய்ப்பினையும் பெற்றிருந்தனர். அவ்வாறு அவருடன் உரையாடலில் ஈடுபடுவது, அறிவுப் பசியுடைய மாணவர்க்குச் சிறந்த விருந்தாய் அமையலாயிற்று.

இந்த விதமான நல்லுறவைப் பேணிக்கொண்டமையால், தம் விழுமிய சிந்தனை விதைகளுக்கு ஏற்ற விதை நிலங்களைப் பெறுவதிலே, கார்த்திகேசன் பெருவெற்றி கண்டார். இந்த வெற்றிக்கு அவருடைய நகைச்சுவையும், கிண்டற் போக்கிலான குறுங்கதைகளும் துணுக்குகளும் பெரிதும் உதவின. அவர் விடும் 'பகிடி'களின் பொருட்டே, பூவைத் தேடி மொய்க்கும் தேனீக்கள் போல மாணவர்கள் அவரை நாடிச் செல்வார்கள்.

அவர் எல்லா வேளைகளிலும் அரசியல்தான் பேசிக்கொண்டிருப்பார் என்றும் சொல்லிவிட முடியாது. மனித நடத்தைகள், பழக்கவழக்கங்கள், மக்களின் மனப்பான்மைகள், நடவடிக்கைகள், போக்குவரத்துகள் பற்றிய ஆழமான விமரிசனங்களைக்

கூட எந்த ஒரு சாரரின் மனமும் புண்படாத பாங்கிலே, சாதுரியமான ‘பகிடிகளாக்கி’ எதிராளிகளும் கேட்டு இரசிக்கக் கூடிய விதத்தில் அமைத்துச் சொல்வது அவருடைய சாதுரியமும் சாமர்த்தியமும் ஆகும்.

பள்ளிக்கூடத்திலே அவர் பாடம் நடத்திக்கொண்டிராத சமயங்களிலும்கூட, அவரைச் சுற்றி ஒரு மாணவர் குழுவினை எப்பொழுதும் காணலாம். அந்த மாணவர் குழுவிலே க.கைலாசபதியும் அடிக்கடி காணப்படுவார் என்பதைக் கூறாமல் விடமுடியாது.

அந்தக் காலத்திலே, யாழ்ப்பாணத்தின் பெருங்கல்லூரிகளிடையே உயர்வகுப்பு மாணவர்களுக்கான விவாதங்கள் நடப்பதுண்டு. அந்த விவாதங்களுக்கான விடயங்களைத் தெரிந்தெடுப்பதிலும், எதிரும் புதிருமான கட்சிகளுக்குச் சார்பாகவும் மறுப்பாகவும் வாதப் பிரதிவாதங்களையும் ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்லி விளக்குவதிலும் கார்த்திகேசன் அவர்கள் பெரிதும் ஈடுபாடு காட்டினார். இவற்றின் வழியே உலகியல் பற்றிய தெளிவையும், புத்தி பூர்வமான ஆய்வு மனப்பாங்கையும், விமரிசன அக்கறையையும் மொழித்திறனையும் வளர்த்தெடுப்பதில் அர்ப்பணிப்புடன் ஓயாது உழைத்து வந்தார்.

அதுமட்டுமல்லாமல், சமகால உலக நிகழ்வுகளின் உள்ளோட்டங்கள், அவற்றின் மூல ஏதுக்கள் ஆகியவற்றை அணுகி ஆராய்ந்து நோக்கும் பண்பையும், மனப்பழக்கத்தையும் தம் மாணவரிடையே ஊக்கி வளர்த்தார். இதனால் கண்மூடித்தனமான கருத்துக்களையும் அறியாமையின் பாற்பட்ட நிலைப்பாடுகளையும் களைந்திட வேண்டும் என்ற குறிக்கோள், அவர்தம் பணிகளால் ஊட்டம் பெற்றது.

இவையெல்லாம் கல்விக்கூட எல்லைகளின் உள்ளே அவர் மேற்கொண்ட பணிகள். ஆனால் அவருடைய பணிகள், இந்த வரம்பின் உள்ளே மாத்திரம் அடங்கி நின்றவை அல்ல.

பள்ளி மாணவர்கள் என்ற வட்டத்துக்கு வெளியில் உள்ள மக்கள் திரளின் வாழ்நிலை பற்றியும் வருங்கால வரலாற்று வளர்ச்சி பற்றியும் அவர் மனப்பூர்வமான அக்கறை பூண்டிருந்தார். அதனாலேதான் பொது உடைமைச் சிந்தனைகளையும் செயல்களையும் கற்றறிவாளர் மட்டத்திலும் ஏனைய மக்கள் மன்றுகளிலும் அவர் பரப்ப முற்பட்டார். அவர் கட்சி அரசியலிலும் நிறுவனமயப்பட்ட பிரசாரப் பணிகளிலும் முன்னின்று உழைத்து வந்தார். அந்த அறிவியக்கத்தையும் அரசியல் இயக்கத்தையும் அவர் ஒரு பெருவேள்வியாகக் கொண்டு பணியாற்றினார்.

“மக்கள் வாழ்விற்கு உழைப்பதே நியதி. ஆகவே எக்காலத்திலும் எந்நாட்டிலும் உழைப்பாளர்களே காட்சிக்கெளிய, பல்லாயிரக்கணக்கான கரங்களை உடைய இவ்வுலக பிரம்மாக்கள் ஆவர்.”

இவ்வாறு கார்த்திகேசன் அவர்கள் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்து இருக்கிறார். இந்த உன்னதமான பெருமகனாரின் நினைவு போற்றப்படும் இச்சமயத்தில், அவர்தம் நேரடி மாணவனாக இராவிடினும், அவர் பரப்பிய கருத்தொளியின் செல்வாக்கு வட்டத்துக்கு உட்பட்டிருந்த ஒருவன் என்ற முறையில், இந்தக் குறிப்புகளை எழுதக்கூடிய நிலையில் நான் உள்ளேன்.

மாணவப் பருவத்திலே கிடைத்த அளவு தொடர்பு வாய்ப்புகள் பிற்பட்ட காலங்களிலே கிடைக்கவில்லையாதலால், எனக்கு நன்கு தெரிந்த செய்திகள் சிலவற்றினை மாத்திரம் இக்குறிப்பில் உள்ளடக்கி உள்ளேன். முழுமையான வரலாற்றுச் செய்தி விவரங்களையும் அவரது அரசியல் ஆளுமையையும் அறிந்து கொள்வதற்கு உதவவல்ல தோழர்களும் சகபாடிகளுமான அபிமானிகள் பலர் நம்மிடையே உள்ளனர். அவர்கள் தரும் செய்திகளும் கருத்துகளும் ஒன்றிணையும்போது கார்த்திகேசனார் பற்றிய முழுமையான படிமம் ஒன்று நமக்குக் கிடைக்கிறது.

அந்தப் படிமம் மிகவும் சக்தி வாய்ந்தது. நீதி எது, நியாயம் எது என்பதைத் திடமாக வரையறுத்துக் கொள்ள நமக்கு அது அருந்துணையாகி உதவும்.

பல்லாண்டு கால முடக்கத்திலே செயல் குன்றிக்கிடந்த ஒரு மக்கள் குழுவுக்கு, அறிவொளியின் பெறுமதியையும் வரலாற்று வளர்ச்சியின் வழிமுறைகளையும், மீட்சிப் பாதையின் நுணுக்க விவரங்களையும் வெறும் கற்பனையாக அல்லாமல், பரந்த உலகின் நடைமுறைப் பாடங்களின் ஊடாக உணர்த்த வல்லதாய் அந்தப் படிமம் விளங்கித் திகழ்ந்து வழிகாட்டும்.

(கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அவர்கள் நீண்ட காலம் கற்பித்த யாழ்.இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற காலஞ்சென்ற கவிஞர் இ.முருகையன், பிற்காலத்தில் கல்விப் பணிப்பாளர், யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் போன்ற உயர் பதவிகளை திறம்பட வகித்த ஒரு நேர்மைமிக்க சிறந்த நிர்வாகியாவார். அவரது இந்தக் கட்டுரை, கார்த்தகேசனின் புதல்விகளுள் ஒருவரான ஜானகி பாலகிருஸ்ணன் அவர்கள் தொகுத்து வெளியிட்ட “கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்” என்ற தொகுப்பிலிருந்து நன்றியுடன் எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

---

முதலாளித்துவ வளர்ச்சியில் இரு கட்டங்கள் உள்ளன. முதல் கட்டத்தில் சுதந்திரமான போட்டி ஆதிக்கம் செலுத்துகிறது. முக்கியமாக உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சொந்தம். இரண்டாவது கட்டம் 20வது நூற்றாண்டு திருப்பத்தில் தொடங்கியது. அதை ஏகபோக முதலாளித்துவம் அல்லது ஏகாதிபத்தியம் என்போம். இந்தக் கட்டத்தில் பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் ஆதிக்கப் பங்கு வகிப்பது பெரு முதலாளிகளின் சங்கங்கள் ஏக போகங்களாகும். பங்கு முறைச் சொத்து மற்ற முதலாளித்துவ சொத்துக்களை விட ஆதிக்கம் செலுத்துவதாகிறது. பொருளாதாரத்தில் பூர்ஷ்வா அரசின் தலையீடு அதிகரிக்கிறது. அரசு – ஏகபோக முதலாளித்துவ அமைப்பு உருவாகிறது. முதலாளித்துவம் பொது நெருக்கடிக்குள்ளாகும் போது ஏகாதிபத்தியம் ஒரு முடிவிற்கு வருகிறது. அதாவது அதனுடைய சிதைவின் சகாப்தத்திற்கு வருகிறது. இந்தக் காலமானது மாபெரும் அக்டோபர் சோஷலிச புரட்சியால் முன்னறிவிக்கப்பட்டது.

முதலாளித்துவ உற்பத்தி முறையானது மார்க்சால் அவருடைய “மூலதனம்” என்ற நூலில் பகுத்தாராயப்பட்டது. அவர் விரித்துரைத்த கருத்துக்கள் லெனினால் மேலும் அவருடைய நூலான “ஏகாதிபத்தியம் – முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம்” என்ற நூலில் செழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

**(எம்.என்.ரீன்டினா, ஜி.பி.செர்னிக்கவ், ஜி.என்.ஹீடக்கோர்மவ் ஆகியோரால் எழுதி வெளியிடப்பட்ட “அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள்” என்ற நூலிலிருந்து)**

# பிரிட்டனின் ட்ரம்ப்!




பல சுற்றுப் போட்டிகளைக் கடந்து கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராகவும், பிரிட்டன் பிரதமராகவும் பதவியேற்றுள்ளார் போரிஸ் ஜோன்ஸன். சில குறிப்பிட்ட வட்டத்தினர் மட்டுமே அவரை இதுவரை 'பிரிட்டனின் ட்ரம்ப்' என்று அழைத்து வந்தனர். ஆனால், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட வாழ்த்துச் செய்தி மூலம் போரிஸ் ஜோன்ஸனுக்கு 'பிரிட்டனின் டிரம்ப்' என்ற பெயர் உண்டு என்பது சர்வதேச அளவில் வெளிப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், பிரிட்டனின் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் தலைவர் ஜெரிமி கார்பைன், 'பிரிட்டனின் ட்ரம்ப்' என்று பிரதமர் போரிஸை கூறி கடுமையாக விமர்சித்துள்ளார். அவர் இவ்வாறு பெயர் சூட்டி அழைக்கப்படுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பைப் போலவே தீவிர முதலாளித்துவம் மற்றும் வலதுசாரிக் கொள்கைகளை உடையவர் போரிஸ். உள்நாட்டு மக்களுக்கும், அவர்களின் நலன்களுக்குமே முன்னுரிமை என்ற கொள்கையை ட்ரம்ப்பைப் போலவே தீவிரமாகக் கடைப்பிடிப்பவர் போரிஸ். இது தவிர பெண் எம்.பிக்களை விமர்சிப்பதிலும், இனரீதியான கருத்துகளைப் பேசி சர்ச்சையை ஏற்படுத்துவதிலும் ட்ரம்ப்புக்கு சிறிதும் சளைத்தவரில்லை என்பதை போரிஸ் ஏற்கெனவே நிரூபித்து விட்டார்.

உதாரணமாகக் கூறுவதென்றால், கடந்த வாரத்தில் தனது கொள்கைகளை விமர்சித்த எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் பெண் எம்.பிக்கள் நால்வரை கடுமையாக விமர்சித்த ட்ரம்ப், "அமெரிக்காவை விரும்பவில்லை என்றால் உங்கள் மூதாதையர்களின் இடத்துக்கே சென்று விடுங்கள்" என்று திட்டித் தீர்த்தார். அந்த பெண் எம்.பிக்களில் மூவர் ஆபிரிக்க வம்சாவளியினர் மற்றொருவர் லெபனான் வம்சாவளி முஸ்லிம் ஆவார். இந்த இனவெறி விமர்சனத்துக்காக அமெரிக்க நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானத்தை ட்ரம்ப் எதிர்கொண்டதுடன், சொந்தக் கட்சியினரின் விமர்சனத்துக்கும் உள்ளானார்.

**சு.வெங்கடேஸ்வரன்**

இப்போது ட்ரம்ப் செய்ததை சில ஆண்டுகளுக்கு முன்பே செய்தவர் போரிஸ். அப்போது அவர் பிரதமராக இல்லாததால் அது சர்வதேச கவனத்தைப் பெறவில்லை. "சூடான உணவுப் பதார்த்தம் போல எதிர்க்கட்சி பெண் எம்.பிக்கள் உள்ளனர், பர்தா அணிந்த (முஸ்லிம்) பெண்கள் வங்கிக் கொள்ளையர்கள் போலவும், அஞ்சல் பெட்டி போலவும் உள்ளனர்" என்பது போரிஸின் சர்ச்சைப் பேச்சுகளுக்கு உதாரணங்கள்.

பொருளாதார கொள்கைகளைப் பொறுத்தவரையில் ட்ரம்ப், போரிஸ் இருவருமே பெரும் முதலாளிகளுக்கு ஆதரவானவர்கள். பெரு நிறுவன வரிகளைக் குறைக்க வேண்டும் என்பதில் இருவருமே உறுதியாக இருப்பவர்கள். அமெரிக்காவின் வர்த்தக நலன்களைக் கருத்தில் கொண்டு மற்ற நாடுகளுடனும் மோதல் போக்கைக் கடைப்பிடிப்பவர் ட்ரம்ப். அதேபோல பிரிட்டனின் வர்த்தக நலன்களைக் கருத்தில் கொண்டு ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என்ற ('பிரெக்ஸிட்') கொள்கையை தீவிரமாக முன்னெடுத்தவர் போரிஸ்.

இவற்றுக்கெல்லாம் மேலாக இருவருமே தவறான தகவல்களை பொதுவெளியில் பேசத் தயங்காதவர்கள். தவறான தகவல் அளித்ததற்காக ஒருமுறை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட அவப் பெயருக்கு உரியவர் போரிஸ். "காஷ்மீர் விஷயத்தில் மத்தியஸ்தம் செய்யுமாறு பிரதமர் நரேந்திர மோடி தன்னிடம் கேட்டுக் கொண்டார்" என்பது ட்ரம்ப்பின் பொய்யுரைக்கு சமீபத்திய உதாரணம்.

இப்படி இருவருக்கும் பல ஒற்றுமைகள் இருந்த போதும், ட்ரம்ப்பைப் போன்ற ஒரு தலைவரை பிரிட்டன் மக்கள் விரும்பவில்லை என்பது கடந்த ஆண்டு நடத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பில் தெரியவந்தது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் செயல்பாடுகள் குறித்து பிரிட்டனைச் சேர்ந்த இப்ஸொஸ்–மோரி (Ipsos MORI) நிறுவனம் கடந்த ஆண்டு ஜூலையில் தங்கள் நாட்டு மக்களிடம் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தியது. அதில், 19 சதவீதம் பேர் மட்டுமே ட்ரம்ப் குறித்து திருப்தி தெரிவித்தனர். மேலும், அப்போது ட்ரம்ப்பின் பிரிட்டன் வருகைக்கு எதிராகவும் போராட்டங்கள் நடைபெற்றன. ஆனால் காலத்தின் கோலத்தில், செயல்பாடுகளில் ட்ரம்ப்பின் நகலாகத் திகழும் போரிஸ், பிரிட்டனின் பிரதமராகியுள்ளார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக 'மிகச் சிறந்த மனிதர்' என்று புதிய பிரதமர் போரிஸுக்கு ட்ரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார். ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலக வேண்டும் என்பதில் ட்ரம்ப் எப்போதும் ஆர்வம் காட்டி வருகிறார். அதே கொள்கையுடைய போரிஸ், பிரிட்டன் பிரதமராகியிருப்பது நிச்சயமாகவே ட்ரம்ப்புக்கு மகிழ்ச்சி அளிப்பதுதான்.

மேலும், அமெரிக்காவுக்கும் – பிரிட்டனுக்கும் இடையிலான உறவு சமீப காலமாக சீராக இல்லை. முக்கியமாக, 'ட்ரம்ப் திறமையற்றவர் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவை சிறுமைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே, அவரால் மேற்கொள்ளப்பட்ட ஈரான் அணுசக்தி

**தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...**

# செல்வி – சில நினைவுகள்

"**செல்**வி" என்று அழைக்கப்படும் செல்வநிதி தியாகராசா பாசிசப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு 28 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. கடத்தப்பட்ட அவர் பலத்த சித்திரவதையின் பின் கொல்லப்பட்டு சுமார் 22 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. (அவர் புலிகளால் கடத்தப்பட்ட இன்னொரு யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனான மனோகரனுடன் சேர்த்து 1997இல் கொல்லப்பட்டதாக புலிகளிடமிருந்து கிடைத்த தகவல்கள் மூலம் அறிய வந்ததாக 'விக்கிபீடியா' குறிப்பிடுகின்றது)

செல்வி, அவர் தங்கியிருந்த யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் உள்ள ஆத்திசூடி வீதி அறையிலிருந்து 1991ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30 திகதி புலிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

செல்வியின் பிறப்பிடம் வவுனியா மாவட்டத்திலுள்ள சேமமடு என்ற குடியேற்றக் கிராமமாகும்.

செல்வி கடத்தப்பட்ட பொழுது யாழ்.பல்கலைக்கழகத்தில் அரங்கியல் மற்றும் நாடகத்துறையில் மூன்றாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தார்.

முற்போக்கு சிந்தனைகளால் ஆகர்சிக்கப்பட்ட செல்வி ஆரம்பகாலத்தில் புளொட் இயக்கத்தின் ஆதரவாளராகச் செயற்பட்டு வந்தார். ஆனால் புளொட் இயக்கம் உட்பட அநேகமான ஆயுதப்போராட்ட இயக்கங்களுக்குள் அராஜகம் தலைவிரித்தாடியதால் அமைப்பு ரீதியிலான அரசியலிலிருந்து ஒதுங்கி சுதந்திரமாகச் செயற்பட ஆரம்பித்தார். அவருக்குத் துணையாக வேறு பல பல்கலைக்கழக மாணவர்களும் இருந்தனர்.

செல்வியின் அவாவும் ஆற்றலும் பன்முகத்தன்மை வாய்ந்தவை.

அவர் ஒரு உணர்வுபூர்வமான கவிஞராகத் திகழ்ந்தார். அவரதும், அவருடைய நெருங்கிய தோழியான சிவரமணியினதும் (யாழ்.பல்கலைக்கழக மாணவியான இவர் யாழ்ப்பாணிய சமூகம் தந்த நெருக்கடி காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார்) சில கவிதைகள் 'சொல்லாத சேதிகள்' என்ற ஈழத்துப் பெண் கவிஞர்களின் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. செல்வி புலிகளால் கொல்லப்பட்ட பின்பு அவரது கவித்துவ



ஆற்றலுக்காக சில சர்வதேச அமைப்புகளால் விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அதுமாத்திரமின்றி, செல்வி ஒரு நாடக நடிகையும் நெறியாளருமாவார். அவர் 'சீதனம்' மற்றும் 'பாலியல் வன்முறைகள்' என்ற இரு நாடகங்களை இயக்கியுள்ளார். புலிகளால் கடத்தப்படுவதற்கு முதல்நாள் Palestinian Intifa என்ற நாடகத்தில் நடித்துள்ளார்.

பெண் விடுதலை சம்பந்தமான செயற்பாடுகளிலும் செல்வி அக்கறையுடன் செயலாற்றினார். அதற்காக தானே முன்னின்று 'தோழி' என்ற பெயரில் பெண்களுக்கான சஞ்சிகை ஒன்றை ஆரம்பித்து நடத்தி வந்தார். அந்தக் காலகட்டத்தில் வடக்கில் பெண்களுக்கான அமைப்பாக இயங்கி வந்த 'பூரணி' என்ற அமைப்புடனும் இணைந்து பணியாற்றினார்.

## மணியம்

அன்றைய காலகட்டத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தில் 'கலாச்சாரக் குழு' என்ற பெயரில் ஒரு அமைப்பு இயங்கி வந்தது. இந்த அமைப்பில் புலிகள் உட்பட எல்லா அமைப்புகளையும் சேர்ந்த மாணவர்கள் ஒன்றுபட்டு செயற்பட்டு வந்தனர். செல்வியும் அவரது நண்பர்களும் அதில் அக்கறையுடன் செயற்பட்டனர்.

இந்த அமைப்புடன் வெளியிலிருந்து தொடர்புபட்டிருந்த ஒரு ஆசிரியர் (இவர் புலிகளுக்காக சில பிரசார நாடகங்களை இயக்கியவர்) இந்த அமைப்பை புலிகளின் ஒரு உப அமைப்பாக மாற்றும் பிரயத்தனங்களில் ஈடுபடத் தொடங்கினார். இதனால் கலாச்சாரக் குழுவுக்குள் முரண்பாடுகள் தோன்றின. சில புலி ஆதரவாளர்கள் உட்பட பலர் அந்த ஆசிரியரின் முயற்சியை எதிர்த்தனர். அந்த எதிர்ப்பில் செல்வியும் அவரது தோழர்களும் முன்னணியில் நின்றனர். இந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில் சமரசத்தை ஏற்படுத்துவதற்காக நானும் ஒருமுறை அழைக்கப்பட்டிருந்தேன்.

அவர்களின் இந்தத் தீவிரமான எதிர்ப்பு நிலைதான் செல்வியையும் அவரது மற்றைய இரு பல்கலைக்கழக நண்பர்களான தில்லைநாதன் (தில்லை) மற்றும் மனோகரன் ஆகியோரையும் புலிகள் கடத்திச் சென்று கொலை செய்வதற்கு அடிப்படையாக அமைந்தது என்பதே பலரின் அபிப்பிராயமாக இன்றும் இருக்கின்றது.

•

செல்விக்கும் எனக்குமிடையிலான உறவு அவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்க வந்தபோது ஆரம்பமானது. பல்கலைக்கழகத்துக்கு முன்னால் புத்தகக்கடை ஒன்றை நடத்தி வந்த என்னை அவர் சில நண்பர்களுடன் வந்து சந்தித்தபோது அந்த உறவு ஆரம்பமானது.

சமூகத்துக்காக அர்ப்பணிப்புடன் சில விடயங்களைச் செய்ய வேண்டும் என்ற பொது நோக்கு எமக்குள் இருந்ததாலும், நாங்கள் இருவரும் விவசாயக் குடும்பங்களிலிருந்து வந்ததாலும், அவரது சேமமடுக் கிராமத்தில் எனது உறவினர்கள் சிலர் வாழ்ந்து வாழ்ந்ததாலும், எல்லாவற்றுக்கும் மேலாக 1960களில் அவரது சேமமடு கிராமத்தில் நான் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக சில வேலைகளில் ஈடுபட்டிருந்ததாலும் எமது உறவு பலமாக வளரத் தொடங்கியது.

இந்தக் காலகட்டத்தில் செல்வியின் நட்பு வட்டத்தில் இருந்த சிலர் எனது ஞாபகத்துக்கு வருகின்றனர். அவர்களில் புலிகளால் கொல்லப்பட்ட தில்லை, மனோகரன், தற்கொலை செய்து கொண்ட சிவரமணி மற்றும் அஞ்சலி, கலா, அம்பிகா, மலையகத்தைச் சேர்ந்த இராதாகிருஸ்ணன், செல்வராஜ், புத்தளத்தைச் சேர்ந்த ரவி, கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த விஜயரத்தினம், மார்கிரெற்றா, செல்லத்துரை, ஜோதிலிங்கம், நாகராசா பிற்காலத்தில் அவரது துணைவியான வத்சலா, விஜி உட்படப் பலர் இருந்தனர்.

இவர்கள் அனைவரும் என்னுடனும் அந்நியோன்யமாகப் பழகினர். பெரும்பாலான நேரங்களில் என்னைச் சந்திக்க வரும்பொழுது செல்வியும், சிவரமணியும் ஒன்றாகவே சேர்ந்து வருவர். இறுதியாக இருவரும் சேர்ந்து வந்தது ஒரு ஆங்கில நாடகத்தின் நுழைவுச்சீட்டை எனக்குத் தருவதற்காக என்பது எனது மனதில் இன்றும் பசுமையாக இருக்கின்றது.

•

செல்வி புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட அன்று ஒரு பிற்பகல் நேரம் யாழ்.பல்கலைக்கழகப் பெண்கள் விடுதிக்கு முன்னால் இருந்த எனது கடைக்கு அவர் மிகுந்த பதட்டத்துடன் வந்தார். (பல்கலைக்கழக நடுவாசலுக்கு முன்னால் இருந்த எனது கடையை இந்திய அமைதிப் படையினர் 1990 ஒக்ரோபரில் பீரங்கித் தாக்குதல் நடத்தி தகர்த்துவிட்ட பின்னர் எனது கடையை அதே சேர்.பொன்.இராமநாதன் வீதியில் பெண்கள் விடுதிக்கு முன்னால் தற்காலிகமாக மாற்றியிருந்தேன்)

அப்போது கடையில் வேறு எவரும் இருக்கவில்லை.

செல்வியின் பதட்டத்தை உணர்ந்த நான், “என்ன செல்வி?” என வினவினேன்.

“மணியண்ணை தில்லையை கம்பசுக்கு பின்னாலை உள்ள றோட்டிலை வைச்சு பிடிச்சுப்போட்டாங்கள். அடுத்ததாக என்னிட்டை வந்தாலும் வருவாங்கள். அதுதான் என்ன செய்யிறது எண்டு தெரியல்லை” என பதட்டத்துடன் கூறினார்.

தில்லையை பிடித்தவங்கள் யார் என்பதை செல்வி சொல்லாவிட்டாலும் எனக்கு ஊகிப்பது சிரமமாக இருக்கவில்லை.

“அப்படியென்றால் நீங்கள் கொஞ்ச நாளைக்கு வேறை எங்கையாவது தலைமறைவாக இருப்பது நல்லது” என நான் கூறினேன்.

“இல்லை மணியண்ணை, நான் எங்கை ஒளிச்சாலும் அவங்கள் தேடிக் கண்டுபிடிச்சுப் போடுவாங்கள். இப்ப நான் என்ரை ரூமிலை போய் இருக்கப்போறன். அங்கை பிடிக்க வந்தால் சுத்தியுள்ள சனம் விடாது எண்டு நினைக்கிறன்” என்று சொல்லவிட்டு, சிறிது நேரம் உரையாடிய பின் அவர் தனது சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

அவரது பதிலில் இருந்த உறுதியைக் கண்டு நான் சற்றுப் பிரமித்துப் போனேன். அவர்தான் வசிக்கும் அயலிலுள்ள சனங்கள் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதை எண்ணியே வியந்தேன். உண்மையான ஒரு மக்கள் போராளிக்குத்தான் இந்த உறுதிப்பாடு வரும்.

செல்வி தங்கியிருந்த ஆத்திசூடி வீதியில் வாழ்பவர்களில் பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்பதை நான் அறிவேன். அங்கு எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிக்கு பல தோழர்கள் இருந்தனர். அவர்களில் பலர் அப்பொழுது நடுத்தர வயதை அல்லது முதுமையை அடைந்திருந்தனர்.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட இயங்கங்கள் ஆரம்பமான பின்னர் அப்பகுதி இளைஞர்களில் பலர் புளொட் இயக்கத்தில் இணைந்து செயல்பட ஆரம்பித்திருந்தனர். அந்த இளைஞர்களுக்கும் புலிகளுக்கும் இடையே தகராறுகளும் நடந்து வந்தன.

நான் வெளியே வந்து செல்வி எனது கடைக்கு அருகில் ஆத்திசூடி வீதியில் திரும்புவதைப் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் மீண்டும் கடைக்குள் வந்தேன். செல்விக்கு எதுவும் நடக்காது என்ற நப்பாசை எனது மனதில் உருவாகியிருந்தது.

செல்வி எதிர்பார்த்தபடியே புலிகள் சிறிது நேரத்தில் அவரது இருப்பிடத்துக்கு வந்து பொதுமக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அவரைப் பிடித்துச் சென்றுவிட்டதாக பின்னர் அறிந்தேன். அன்று இரவு முழுக்க மன வேதனையால் தூக்கமின்றிப் புரண்டேன். ஏனெனில் புலிகள் ஒருவரை, அதுவும் மாற்று இயக்கமொன்றில் இருந்தவரைப் பிடித்துச் சென்றால் அவர் திரும்பி வருவது சாத்தியமில்லை என்பதை எண்ணற்ற சம்பவங்கள் மூலம் அறிந்திருந்தேன்.

செல்வியை புலிகளின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு பல்கலைக்கழக மட்டத்தில் பல முயற்சிகள் நடந்தன.

செல்வியின் உடன்பிறந்த தங்கை ஒருவர் தனது கைக்குழந்தையுடன் சேமமடுவிலிருந்து வந்து செல்வியை விடுவிப்பதற்காக பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டதுடன், புலிகளின் பல முகாம்களிலும் ஏறி இறங்கினார். எனது வீட்டுக்கும் பல தடவைகள் வந்து ஆலோசனை நடத்தினார். எதனாலும் ஒரு பிரயோசனமும் நிகழவில்லை. பல நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து செல்வியின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட அவர் ஈற்றில் வெறுங்கையுடனும் நிராசையுடனும் தனது ஊருக்குத் திரும்பிச் சென்றார்.

•

செல்வியை புலிகள் பிடித்துச் செல்வதற்கு முன்னர் அவரது நட்பு வட்டத்தில் கடைசியாக அவரைச் சந்தித்த நபர் நான்தான் என நினைக்கிறேன்.

ஆனால் வரலாறு எப்படியெல்லாம் நடை போடுகிறது. செல்வியை பிடித்துச் சென்ற அதே 1991ஆம் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி புலிகள் என்னையும் பிடித்துச் சென்றனர். ஒன்றரை ஆண்டுகள் அவர்களது பல்வேறு வதை முகாம்களில் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்த பின்னர் என்னை விடுதலை செய்தனர்.

என்னை விடுதலை செய்வதற்கு முன்னர் என்னுடன் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் உரையாடிய புலிகளின் புலனாய்வுப் பிரிவு துணைப் பொறுப்பாளர் கபிலம்மான் என்பவன், “நீங்கள் ஒரு கட்சிக்காரன் (அவன் குறிப்பிட்டது எனது கம்யூனிஸ்ட் கட்சியை) எண்டபடியால் தப்பிப்பிழைச்சுப் போறியள். இயக்கக்காரன் எண்டால் கதை வேறை” என ஒரு நமுட்டுச் சிரிப்புடன் கூறினான்.

புலிகள் என்னைப் பிடித்து வைத்திருந்த காலத்தில் இரு தடவைகள் செல்வியைப் பிடிப்பதற்கு சற்று முன்னர் புலிகளால் பிடிக்கப்பட்ட தில்லையை காணும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் செல்வி புலிகளின் பெண்கள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததால் அவரைக் காணும் வாய்ப்புக் கிட்டவில்லை.

ஆனால் ஒருமுறை புலிகள் பிடித்து வைத்திருக்கும் ‘கைதி’களுக்குப் பொறுப்பான காந்தி என்பவன் என்னை அழைத்து, “நீதான் செல்வி தரும் கடிதங்களை கொழும்புக்கு இரகசியமாக அனுப்புவது எண்டு தகவல் கிடைச்சிருக்கு. உண்மைதானா?” எனக் கேட்டான்.

நான், “அப்பிடி ஒருக்காலும் நான் செல்வியிட்டை கடிதங்கள் வாங்கி அனுப்பவில்லை” என மறுத்தேன்.

அவன் அதை நம்ப மறுத்து, “பொய் சொல்லதே” எனக் கூறி ஒரு மரக்கொட்டனால் என்னைத் தாறுமாறாகத் தாக்கினான்.


நான் “இல்லை” என மறுத்ததுடன், “நீங்கள் நம்பாவிடில் எனக்கு முன்னால் செல்வியை வைத்துக் கேளுங்கள்” என்று கூறினேன்.

“என்னடா எங்களுக்கு சுத்தப் பாக்கிறியா? செல்வி எப்பிடி இருக்கிறாள் எண்டு அறிய பிளான் போடுறியா?” என மேலும் தாக்கினான்.

அவன் சொன்ன வார்த்தைகளிலிருந்து

**தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...**

# ஹோ சி மின் அவர்களின் 50ஆவது ஆண்டு நினைவாக



வியட்நாம் சோசலிசக் குடியரசின் தந்தை என வர்ணிக்கப்படும் புரட்சியாளர் ஹோ சி மின் இறந்து 50 வருடங்கள் உருண்டோடிவிட்டன.

1890 மே மாதம் 19ஆம் திகதி பிறந்த அவர், 1969 செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி தமது 79ஆவது வயதில் காலமானார்.

அவர் தமது வாழ்நாள் முழுவதும் வியட்நாமை ஆக்கிரமித்திருந்த பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியங்களிடமிருந்து தமது தாய்நாட்டை மீட்டெடுக்கும் போராட்டத்தில் வியட்நாம் மக்களுக்கு உறுதியுடன் தலைமை தாங்கினார்.

அவர் உயிருடன் வாழ்ந்த காலத்தில் ஏகாதிபத்தியவாதிகளால் வடக்கு – தெற்கு எனப் பிரிக்கப்பட்டிருந்த வியட்நாமில், வடக்கு வியட்நாமை விடுதலை செய்து அங்கு சோசலிச அரசொன்றை நிறுவி அதற்குத் தலைமைதாங்கினார்.

அதேநேரத்தில் தெற்கு வியட்நாமை ஆக்கிரமித்திருந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தையும் வழிநடத்தினார். தெற்கு வியட்நாமையும் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுதலை செய்து, இரு வியட்நாம்களையும் மீண்டும் ஒன்றாக இணைத்து முழு நாட்டிலும் சோசலிச அரசொன்றை நிறுவுவதே அவரது கனவாக இருந்தது. அவரது கனவு நனவாகும் முன்னர் அவர் மரணித்துவிட்டார்.

ஆனால் அவரால் உருவாக்கப்பட்ட வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் அடுத்த கட்ட தலைவர்கள் 1975இல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முற்றுமுழுதாகத் தோற்கடித்து தென்வியட்நாமை விடுதலை செய்ததுடன், இரு வியட்நாம்களையும் மீண்டும் ஒன்றிணைத்து தமது மகத்தான தலைவர் ஹோ சி மின் அவர்களின் கனவை நனவாக்கினர்.

ஹோ சி மின் அவர்களின் வாழ்வு உலகம் முழுவதும் தமது விடுதலைக்காகப் போராடும் கோடானுகோடி அடக்கி ஒடுக்கபட்ட மக்களுக்கு ஒரு ஆதர்ச புரட்சிகர வாழ்வாகத் திகழ்கின்றது. அவரது 50ஆவது நினைவு தினத்தை வியட்நாம் மக்கள் மட்டுமின்றி, சோசலிசம், ஜனநாயகம், தேசபக்தி என்பவற்றை நேசிக்கும் அனைத்து மக்களும் நினைவுகூர்ந்து வருகின்றனர். அவரது 50ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரால் சிறையிலிருந்து எழுதப்பட்ட கவிதை ஒன்றை 'வானவில்' வாசகர்களுக்காகக் கீழே தந்துள்ளோம்.

**யன்னல் வழியாகப்**

**பொழிகிறது அழகு நிலா**

**யாத்திடுக ஓர் கவிதை**

**என்றெனக்குச் சொல்கிறது**

**மின்னல் மனப் போர்வீரன்**

**நிலைமையிலே யானுள்ளேன்**

**மீதமில்லை நேரமிங்கு**

**கவியேதும் பாடுதற்கு**

(இந்தக் கவிதை 'ஹோ சி மின் கவிதைகள்' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்த கவிதை தொகுதி தமிழிலும் வெளிவந்துள்ளது. தமிழ் மொழிபெயர்ப்பை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான கண்டி – தலாத்துஓயாவைச் சேர்ந்த காலஞ்சென்ற தோழர் கே.கணேஸ் அவர்கள் 70 களில் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது)

---

தோழர் ஹோசிமின் மிகக்கடுமையான உழைப்பாளி. சிறு வயது முதல் அவர் படிக்கும் காலத்தில் ரூசோவைக் (Rousseau) கற்றபோது பிரெஞ்சு புரட்சியின் முழக்கமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதை எப்படி முழங்கினார், அந்த கோஷங்களின் பின்னுள்ள வரலாறு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள சிறுவயதிலேயே பிரான்சை நோக்கிச் சென்றார் கப்பலில். அப்போது எதுவும் தெரியாமல், உணவுக்கும், தங்கவும் என்ன செய்வாய் என்று நண்பர் கேட்டபோது "இரண்டு கைகளையும் உயர்த்தி பத்து விரல்களைக் காண்பித்து இதுதான் மூலதனம்" என்றார்.

கால்சட்டையும், சுருட்டி விடப்பட்ட மேற் சட்டையும் அணிந்து கொண்டு எங்கு போக வேண்டு மென்றாலும் நடந்தே செல்லும் பழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். மலைகளா? செங்குத்தான சிகரமா? வனம் அடர்ந்த காட்டுப்பாதையா? அனைத்திலும் நடந்தே சென்றார்.

**–பெரணமல்லூர் சேகரன்**

---

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

செல்வியின் நிலை அவ்வளவு நல்லதாக இல்லை என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது.

செல்வியையும் என்னையும் சித்திரவதை செய்த புலிகள் இறுதியில் அழிந்தே போனார்கள். ஆனால் அதற்கு முன்னர் செல்வி போன்ற ஆயிரக்கணக்கான உண்மையான மானிட நேயமிக்கவர்களை புலிகள் அழித்தொழித்துவிட்டார்கள் என்பதுதான் வேதனையான விடயம்.

செல்வி ஒருவேளை என்னைப்போல தப்பிப்பிழைத்து இருந்திருந்தால், 2009இல் புலிகள் முள்ளிவாய்க்காலில் முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட பொழுது பலரைப் போல அவரும் மகிழ்ச்சி அடைந்திருக்கக்கூடும்.

---

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

ஒப்பந்தத்திலிருந்து டிரம்ப் விலகினார்' என அமெரிக்காவுக்கான பிரிட்டன் தூதர் கிம் டாரக் சமர்ப்பித்த இரகசிய அறிக்கை வெளியானமை இரு நாட்டு உறவில் பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருந்தது.

இதற்காக பிரிட்டன் தூதரையும், அப்போதைய பிரிட்டன் பிரதமர் தெரஸா மேயையும் டிரம்ப் பகிரங்கமாக விமர்சித்தார். இப்போது, பிரிட்டனில் ஏற்பட்டுள்ள தலைமை மாற்றம் தங்களுக்குச் சாதகமாக இருக்கும் என்பது டிரம்ப்பின் எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பை 'பிரிட்டனின் டிரம்ப்' எந்த அளவுக்கு நிறைவேற்றுவார் என்பது விரைவில் தெரியும்.

**நன்றி: தினமணி, *29.07.2019***

# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்னவிதமான நிலைப்பாட்டை எடுக்கும் என்பது பலரின் கேள்வியாக இருக்கின்றது. பொதுவாகத் தமிழ்த் தலைமைகளினதும் குறிப்பாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் கடந்தகால அரசியல் நிலைப்பாட்டைத் தெரிந்தவர்கள், 'இதிலென்ன சந்தேகம் அவர்கள் வழமைப்பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்தும் வேட்பாளரைத்தான் ஆதரிப்பார்கள்' என எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிடுவார்கள்.




அதில் ஓரளவு உண்மையும் இருக்கலாம். இந்த விவகாரம் குறித்து ஆராய்வதற்கு முன்னர் இந்த விவகாரத்தில் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு என்னவென்பதை முதலில் பார்த்துவிடுவது நல்லது.

கடந்காலங்களில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கங்களில் பங்காளிக் கட்சியாக இருந்ததும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்த பெரிய கட்சியுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி இம்முறையும் மகிந்த அணி நிறுத்தியுள்ள வேட்பாளரையே ஆதரிக்கும் என்பது பலரினதும் கருத்தாகும்.

வடக்கில் ஈ.பி.டி.பிக்கு அடுத்த பெரிய கட்சியான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தல் குறித்து இதுவரை கருத்து எதனையும் வெளியிடவில்லை. அவர்கள் வழமைபோல 'இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன, நமக்கு ஒரு பிரயோசனமும் இல்லை' என்ற பாணியில் கருத்து வெளியிடக்கூடும் என்ற கருத்து நிலவுகின்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு அடுத்ததாக வாக்கு வங்கியைக் கொண்டிருப்பதாக நம்பப்படும் ஆனால் அரசியல் கட்சி எதனையும் கொண்டிருக்காத முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், 'தமிழ் மக்கள் எக்காரணம் கொண்டும் கோத்தபாய ராஜபக்சவுக்கு வாக்களிக்கக்கூடாது' எனப் பகிரங்கமாக அறிவித்துவிட்டார்.

**பிரதீபன்**

ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் தலைமையில் செயல்படும் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனை நிறுத்தும் வேட்பாளரைப் பகிரங்கமாக ஆதரிக்கும் எனத் தெரிகிறது. இதுசம்பந்தமாக வரதராஜப்பெருமாள் அண்மையில் கருத்துத் தெரிவிக்கையில், 'கோத்தபாய ராஜபக்ச போர்க்குற்றம் புரிந்தவர் என்று பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. அரசபடைகள் மட்டுமின்றி புலிகளும் போர்க்குற்றம் புரிந்தவர்கள் என சர்வதேசம் சொல்கிற நிலையில் கோத்தாவை மட்டும் குற்றஞ்சாட்டுவதில் பிரயோசனம் இல்லை. எனவே அதை மறந்துவிடுவதே நல்லது' எனக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி இதுவரை தனது நிலைப்பாடு குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை.

கிழக்கிலங்கையில் தனியான அரசியல் கட்சியொன்றை நடத்தி வரும் கருணா அம்மான் என அழைக்கப்படும் புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதியான விநாயகமூர்த்தி முரளிதரன், 'இராணுவத்தளபதியாக இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த சரத் பொன்சேக முன்பொருமுறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது அவருக்கு தமிழர்கள் வாக்களிக்க முடியுமென்றால், ஏன் கோத்தபாய ராஜபக்சவுக்கு வாக்களிக்கக்கூடாது?' எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார். அதுமட்டுமின்றி, 'ரணில் ஒரு குள்ள நரி, அவரது கட்சி வேட்பாளருக்கு தமிழர்கள் வாக்களிக்கக்கூடாது' எனவும் காட்டமாகக் கூறியுள்ளார்.

அமைச்சர் மனோகணேசனின் தம்பியும், தனியான கட்சியொன்றை நடத்தி வருபவருமான பிரபா கணேசன் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிப்பது என முடிவு செய்திருக்கிறார்.

அதேபோல மலையகத்தின் பெரிய கட்சியான ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரசும் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிப்பது என முடிவு செய்துள்ளது.

முன்னாள் போராளிக்குழுவான ஈரோஸ் இயக்கத்தின் ஒரு பிரிவும் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிப்பது என முடிவு செய்துள்ளது.

இதேவேளை தமிழர்களின் பழம்பெரும் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியை பல சிரமங்களுக்கு மத்தியில் நடத்திவரும் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதித் தேர்தலில் தனது கட்சியின் நிலைப்பாடு என்னவென்பதை இதுவரை அறிவிக்கவில்லை.

இத்தகைய ஒரு பகைப்புலத்தில்தான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவாக இருக்கப்போகின்றது என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

கடந்த காலங்கள் போல தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு சந்தேகத்துக்கு இடமின்றி ஐ.தே.க. நிறுத்தும் வேட்பாளருக்குத்தான் எனச் சொல்வதற்கு இம்முறை அதன் ஆதரவாளர்கள் தயங்குவதைக் காண முடிகின்றது.

அதற்குக் காரணம் 2015இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. 'பொது வேட்பாளர்' என்ற பெயரில் நிறுத்திய மைத்திரிபால சிறிசேனவை நிபந்தனை எதுவுமின்றி ஆதரித்ததின் மூலமோ, பின்னர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு கடந்த நான்கரை ஆண்டுகளாக முண்டுகொடுத்து வந்ததின் மூலமோ, தமிழ் மக்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதனையும் பெற்றுக்கொடுக்கவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வு ஒருபுறமிருக்க, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்குக்கூட ரணில் அரசைக்கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பால் எதனையும் செய்ய முடியவில்லை.

இதன் காரணமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது சாதாரண தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி, அதன் ஆதரவாளர்களிடமும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இந்த அதிருப்தியை கடந்த வருடம் (2018) பெப்ருவரியில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் போது தமிழ் மக்கள் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தனர். ஐ.தே.க. அரசாங்கத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பதை தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்பதை அத்தேர்தலில் அதன் வாக்கு வங்கியின் வீழ்ச்சி எடுத்துக்காட்டியது.

இந்தச் சூழ்நிலையில் 4 கட்சிகள் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் அதிகரித்து சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி கூட்டமைப்பைவிட்டு வெளியேறிச் சென்றுவிட்டது. பின்னர் கூட்டமைப்பால் வடக்கு மாகாணசபைத் தலைவராக நிறுத்தப்பட்ட சி.வி. விக்னேஸ்வரனும் அந்த அணியைவிட்டு வெளியேறிவிட்டார். கூட்டமைப்பால் மாகாணசபை உறுப்பினராக நிறுத்தப்பட்ட இன்னொருவரான அனந்தி சிறிதரனும் வெளியேறி தனிக்கட்சி ஆரம்பித்துவிட்டார்.

மிகுதியாக உள்ள மூன்று கட்சிகளில் ஒன்றான செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோவும் அடிக்கடி தலைமைக்கட்சியான தமிழரசுக் கட்சியுடன் மோதலில் ஈடுபட்டு வருகின்றது.

இன்னொரு பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் த.சித்தார்த்தன் தான் கூட்டமைப்பைவிட்டு வெளியேறப்போவதில்லை என்று சொல்லி வந்தாலும், அண்மையில் கோத்தபாய ராஜபக்சவை சந்தித்து சுமார் மூன்று மணித்தியாலங்கள் உரையாடி இருக்கிறார். இதுவரை காலமும் மகிந்த ராஜபக்சவைக்கூட சந்திக்காத சித்தார்த்தன் கோத்தாவை மட்டும் ஏன் சந்தித்தார் என்ற கனதியான கேள்வி எழுந்திருக்கிறது.

இந்த நிலைமைகளுக்கு மத்தியில் கிழக்கு மாகாணத்திலிருந்து உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவான சில தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை அவரது கொழும்பு வாசஸ்தலத்தில் வைத்துச் சந்தித்திருக்கிறார்கள்.

இதில் இன்னொரு வேடிக்கையான விடயம் என்னவெனில், இந்த நிகழ்வுகளுக்கு மத்தியில் தமிழரசுக் கட்சியின் எதிர்காலத் தலைவராக வரவிருப்பவர் எனக் கருதப்படும் எம்ஏ.சுமந்தரனும் கோத்பாய ராஜபக்சவை இரகசியமாகச் சந்தித்திருக்கிறார் என்ற செய்திதான்.

இந்த நிலைமைகளை எல்லாம் வைத்துப் பார்க்கையில், இம்முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்த எடுப்பில் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பதில் சங்கடநிலையை எதிர்நோக்குகிறது என்பது தெளிவாகிறது.

அதாவது, ஒருபக்கத்தில் தமிழ் மக்கள் மத்தியிலும் தமது கட்சி ஆதரவாளர்கள் மத்தியிலும் அரசாங்கத்துக்கும் தமக்கும் ஒருசேர உருவாகியிருக்கும் எதிர்ப்பு நிலையைத் தணிப்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சில தந்திரங்களைக் கையாள முற்படுவது தெரிகின்றது. அதாவது, அவசரப்படாமல் இருந்து நிலைமை தமக்குச் சாதகமாக மாறிய பின்னர் இறுதி நேரத்தில் வழமைப்பிரகாரம் ஐ.தே.க. சார்பு நிலையை எடுப்பது என்பது ஒரு தந்திரோபாயம்.

இன்னொரு தந்திரோபாயம், கோத்தபாய ராஜபக்சதான் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக வெல்வார் என்ற நிலை உருவாகி வருவதால், அவருடன் சில தொடர்புகளைப் பேணி, தமிழ்மக்கள் சார்பாக சில கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றை அவர் ஏற்காததால்தான் ஐ.தே.க. வேட்பாளரை ஆதரிக்க நேர்ந்தது எனப் பின்னர் நியாயம் கற்பிப்பது.

அதனால்தான், 'ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவசரப்பட்டு எந்த முடிவையும் இப்பொழுது எடுக்காது' என சுமந்திரன் தந்திரமாகப் பேசி வருகிறார். அவரது மற்றைய இரு சகாக்களான சம்பந்தன், மாவை சேனாதிராசா போன்றோரும் மௌனம் காத்து வருகின்றனர்.

அதேநேரத்தில், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சிவமோகன் போன்றோரை கோத்தபாயாவுக்கு எதிராகக் கடுமையாகப் பேசுவதற்கும் கூட்டமைப்புத் தலைமை பச்சைக்கொடி காட்டியிருக்கிறது.

உண்மை என்னவெனில், ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் அவசரப்பட்டு முடிவு எதனையும் எடுக்கமாட்டோம் என சுமந்திரன் திரும்பத்திரும்பக் கூறினாலும், கூட்டமைப்பு தனது நிலைப்பாடு குறித்து எப்போதோ முடிவு எடுத்துவிட்டது. அந்த முடிவு ஐ.தே.க. நிறுத்தும் வேட்பாளரையே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பது என்பதுதான். தமிழ் தலைமைகளின் கடந்தகால வரலாற்றை அறிந்தவர்கள் இதைத்தவிர வேறு எந்த முடிவுக்கும் வர இயலாது.

***நன்றி இணையத்தளம்:*** chakkaram.com

பறவைகளோடு நான் எழுகிறேன், வானில் நட்சத்திரங்கள் தோன்றும் போது உறங்கச் செல்கிறேன். **–ஹோ சி மின்**

# இலங்கை வரலாற்றில் அழியாத சுவடுகளைப் பதித்துச் சென்ற 1953 ஒகஸ்ட் 12 ஹர்த்தால்!

இலங்கை 1948 பெப்ருவரி 4ஆம் திகதி பிரித்தானிய காலனித்துவவாதிகளிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர், இலங்கையின் முதலாளித்துவ சுதேச ஆட்சியாளர்களுக்கு எதிராக காலத்துக்குக் காலம் பல மக்கள் போராட்டங்கள் நிகழ்ந்து வந்துள்ளன.

அத்தகைய போராட்டங்களில் மிகப் பெரியதும், இலங்கையின் வரலாற்றில் தீர்க்கமான தாக்கத்தை விளைவித்ததுமான போராட்டம் என்றால், அது 1953 ஒகஸ்ட் 12ஆம் திகதி நடைபெற்ற மாபெரும் ஹர்த்தால் போராட்டமே.

இந்தப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில் இலங்கையின் ஆட்சிபீடத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு வீற்றிருந்தது. அந்த அரசில் பிற்காலத்தில் (1977 – 1990) இலங்கையின் அரைச் சர்வாதிகாரியாக கோலோச்சிய அமெரிக்க விசுவாசியும், கடைந்தெடுத்த வலதுசாரிப் பிற்போக்குவாதியுமான 'குள்ளநரி' ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிதியமைச்சராகப் பதவி வகித்தார்.

அன்றைய காலகட்டத்தில் உலக முதலாளித்துவ அமைப்பு எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையின் ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க. ஆட்சிக்கும் 'சீக்கு' பிடித்துக் கொண்டது.

தனது அரசுக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை வேறு வழிகளில் தீர்ப்பதற்கு வழிதேட விரும்பாத நிதியமைச்சர் ஜே.ஆர்., பொதுமக்களின் மேல் பாரத்தைச் சுமத்துவதன் மூலம் தமது அரசைக் காப்பாற்ற எத்தனித்தார்.

அதன்படி, அதுவரையில் மானிய விலையில் பொதுமக்களுக்கு 25 சதத்துக்கு வழங்கி வந்த அரிசியின் விலையை மும்மடங்காக்கி 75 சதமாக்கினார்.

சீனியின் விலையும் அதிகரிக்கப்பட்டது.

தபால் மற்றும் புகையிரதக் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டன.



1953 இல் ஒரு பெரிய ஊர்வலத்தில் என்.எம். பெரேரா உரையாற்றுகிறார்

பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய உணவாக வழங்கப்பட்டு வந்த பணிஸ் நிறுத்தப்பட்டது.

இவை தவிர பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வந்த பல சமூக நலத்திட்டங்களையும் ஐ.தே.க. அரசு நிறுத்தியது.

இதனால் நாடு முழுவதும் மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டதுடன், அவர்கள் அரசு மீது கடும் கோபம் கொண்டனர்.

**மாவலியான்**

இன்று இருப்பது போல அன்றைய காலகட்டத்தில் ஐ.தே.க. போன்ற கட்சிகளுக்கு தொழிற்சங்கள் எவையும் இருக்கவில்லை. அதேநேரத்தில், லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகளிடம் அமைப்பு ரீதியாகத் திரண்ட தொழிலாளி வர்க்கத்தின் பலம் இருந்தது.

எனவே, ஐ.தே.க. அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடுவதென இடதுசாரிக் கட்சிகள் முடிவெடுத்தன. அந்த முடிவின்படி 1953 ஒகஸ்ட் 12ஆம் திகதியை அவர்கள் போராட்ட தினமாக, அரசுக்கு எதிரான ஹர்த்தால் தினமாக, அதாவது பொது வேலைநிறுத்த தினமாக அறிவித்தன.

இந்தப் போராட்டத்துக்காக நாடு முழுவதும் பிரச்சாரத் தயாரிப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இடதுசாரிகளால் தலைமைதாங்கப்பட்ட இந்தப் போராட்டத்தில், ஐ.தே.கவிலிருந்து விலகி வந்து 1951இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி பங்கேற்கவில்லை. அதேபோல, தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி வந்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம் போன்றவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியும் பங்கேற்கவில்லை.

ஆனாலும், ஹர்த்தாலுக்கு பொதுமக்கள் மத்தியில் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வந்தது. இந்த ஆதரவைக் கண்டு ஒதுங்கி நிற்க விரும்பாத பண்டாரநாயக்க, கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற இறுதிப் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஹர்த்தாலுக்கு ஆதரவாக உரையாற்றினார். அதேபோல, யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் கு.வன்னியசிங்கம் பங்குபற்றி உரையாற்றினார். மலையகத்தைப் பொறுத்தவரை எஸ்.தொண்டமான் தலைமையிலிருந்த மிகப்பெரிய தொழிற்சங்கமான இலங்கை

தொழிலாளர் காங்கிரஸ் ஹர்த்தாலில் நேரடியாகப் பங்குபற்றாதபோதும் தனது ஆதரவைத் தெரிவித்தது.

இடதுசாரித் தொழிற்சங்கங்களின் அழைப்பை ஏற்று *1953* ஓகஸ்ட் *12*ஆம் திகதி நாடு முழுவதும் வெற்றிகரமான பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. அரசாங்க காரியாலயங்கள் எதுவும் இயங்கவில்லை. தொழிலாளர்கள் தமது வேலைத்தலங்களுக்குச் செல்லவில்லை. பஸ் – புகையிரதச் சேவைகள் நடைபெறவில்லை. மாணவர்கள் எவரும் பாடசாலைக்குச் செல்லவில்லை. கடைகள் திறக்கப்படவில்லை. மக்கள் கூட்டம் கூட்டமாக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் நாடு தழுவிய ரீதியில் நடைபெற்றாலும், தலைநகர் கொழும்பு அமைந்திருக்கும் மேல் மாகாணம், தென் மாகாணம், சப்ரகமுக மாகாணம் என்பனவற்றிலேயே முழு வீச்சுடன் போராட்டம் நடைபெற்றது.

மக்கள் எழுச்சி இவ்வளவு வலுவாக இருக்கும் என எதிர்பார்க்காத அரசாங்கம் செய்வதறியாது திகைத்துப் போனது. 'இலங்கையில் இடதுசாரிகள் கிளர்ச்சி மூலம் ஆட்சியைப் பிடித்துவிட்டார்கள்' என்ற சாரப்பட சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

செய்வதறியாது திகைத்த அரசாங்கம் பிற்பகலில் நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்ததுடன், சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. 'கலகக்காரர்களை' சுடும் அதிகாரமும் பொலிசாருக்கு வழங்கப்பட்டது. அந்த அதிகாரத்தை பொலிசார் பயன்படுத்தியதால் அவர்களது துப்பாக்கிச்சூட்டில் சுமார் *10* பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதேவேளையில், இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்த இடதுசாரித் தலைவர்களும் அடுத்த கட்டத்துக்கு போராட்டத்தை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது அறியாது குழம்பிப் போயினர். அதனால் அவர்கள் போராட்டத்தை ஒருநாளுடன் நிறுத்திக் கொண்டனர்.

ஆனாலும் இந்தப் போராட்டத்தின் வீச்சு எவ்வளவுக்கு இருந்ததென்றால், அரசாங்கம் தனது மந்திரிசபைக் கூட்டத்தை வழமையான இடத்தில் நடத்தப் பயந்து கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற HMS Newfoundland என்ற பிரித்தானிய யுத்தக் கப்பலில் நடத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

இந்தப் போராட்டத்தின் காரணமாக நிலைகுலைந்து போயிருந்த பிரதமர் டட்லி சேனநாயக்க இரண்டு மாதங்கள் கழித்து ஒக்ரோபரில் பிரதமர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். தான் இனி அரசியலில் நீடிக்க விரும்பவில்லை என்றும், பௌத்த துறவியாகப் போகப்போவதாகவும் அறிவித்தார். (ஆனால் பின்னர் மீண்டும் அரசியலுக்கு வந்து *1965* பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமராகவும் பதவி வகித்தார்)

அவரது இடத்தில் டட்லியின் நெருங்கிய உறவினரான சேர்.ஜோன் கொத்தலாவல பிரதமராகப் பதவி ஏற்றார்.

*1953* ஓகஸ்ட் *12* ஹர்த்தால் போராட்டம் இலங்கையின் இடதுசாரிகளுக்கும், அதேபோல வலதுசாரிகளுக்கும் நிறைந்த படிப்பினைகளை வழங்கியது. குறிப்பாக இடதுசாரிகளுக்கு அது மிகப் பெறுமதியான படிப்பினைகளை வழங்கிச் சென்றது.

அதாவது, இடதுசாரிகளின் மத்தியில் ஏற்பட்டிருந்த பிளவு, புரட்சிகரமான வேலைத்திட்டங்கள் இல்லாமை, தலைமையின் உறுதியற்ற தன்மை போன்ற விடயங்கள்தான் அந்தப் போராட்டம் தோல்வியடையக் காரணமாயிற்று என்பது நிரூபணமானது. இருந்தும் அதன் பின்னரும் இடதுசாரி இயக்கம் பல கூறுகளாகப் பிளவுபட்டே வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாகவே இலங்கையில் இன்று இடதுசாரி இயக்கம் மிகவும் பலவீனமாக இருக்கின்றது. அதன் காரணமாகவே அந்த இயக்கம் இன்று முதலாளித்துவக் கட்சிகளின் பின்னால் செல்ல வேண்டிய நிலையையும் உருவாக்கியுள்ளது.

இந்தப் போராட்டத்தால் உண்மையில் பயனடைந்தது பண்டாரநாயக்க தலைமைதாங்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சியே. இலங்கை தேசிய முதலாளித்துவத்தின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி தொடங்கப்பட்ட அக்கட்சி, ஹர்த்தால் போராட்டத்தின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அதைப் பயன்படுத்தி *1956* பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. அதன் வெற்றிக்கு கட்சிக்கு தலைமைதாங்கிய பண்டாரநாயக்கவின் நுண்ணறிவும் ஒரு காரணம்.

*1953* ஓகஸ்ட் *12* மாபெரும் ஹர்த்தால் போராட்டம் நடைபெற்று *66* வருடங்கள் முடிவடைந்துவிட்டன. அந்தப் போராட்டம் எந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக நடத்தப்பட்டதோ, அந்தக் கட்சியே இன்றும் ஆட்சியில் உள்ளது. அதுமட்டுமின்றி, அந்தக் கட்சி *1953*இல் இருந்ததைவிட மிகவும் மோசமான நிலைக்கு நாட்டை இட்டுச் சென்றுள்ளது.

அதேநேரத்தில், இலங்கையின் ஒட்டுமொத்த இடதுசாரி இயக்கமும், அதன் நேசசக்திகளான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளும் ஒற்றுமையின்றியும், செயற்பாடுகள் இன்றியும் நலிவடைந்து கிடக்கின்றன.


*1953* ஹர்த்தால் போராட்டத்தின்போது இலங்கையின் தொழிலாளி வர்க்கமும், பொதுமக்களும் வெளிப்படுத்திய உணர்வுகள் காலத்தால் அழியாதவை. அந்த உணர்வுக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டுவதும், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான சிங்கள – தமிழ் – முஸ்லீம் ஏகாதிபத்திய சார்பு சக்திகளைத் தோற்கடித்து, இலங்கையில் உண்மையான ஒரு முற்போக்கு அரசாங்கத்தை நிறுவுவதுமே நமக்கு முன்னால் உள்ள இன்றைய கடமையாகும்.

---

முதலாளித்துவம் மனிதனை மனிதன் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்ட கடைசி சமூக-பொருளாதார அமைப்பாகும். 17-19ம் நூற்றாண்டுகளின் முதலாளித்துவப் புரட்சிகளின் விளைவாய் மேற்கு ஐரோப்பாவில் முதலாளித்துவம் நிலைபெற்றபோது, நிலப்பிரபுத்துவத்துடன் ஒப்பிடுகையில் புதிய சமுதாய அமைப்பு முற்போக்கானதாக இருந்தாலும், உழைப்புச் சுரண்டலை அது ஒழிக்கவில்லை, இதன் வடிவத்தை மட்டுமே மாற்றுகிறது என்பதை பல சிந்தனையாளர்கள் சுட்டிக் காட்டினர். ஷார்ல் ஃபூரியே, ராபர்ட் ஓவன், மற்ற கற்பனவாத சோஷலிஸ்டுகள் முதலாளித்துவ முறைகளைக் கூர்மையாக விமரிசித்தனர். ஆனால் அவர்களாலோ, பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதிகளாலோ உழைப்பை மூலதனம் சுரண்டுவதன் முறையைக் கண்டுபிடிக்கும் முக்கியக் கடமையைத் தீர்க்க இயலவில்லை. விஞ்ஞான கம்யூனிசத்தின் ஆசான்கள்தான் இக்கடமையை நிறைவேற்றினார்கள்.

(கி.ஷஹ்நஸாரவ், அ.போபரீக்கின், யூ.சிராஸின், வி.சுகதேயெவ் ஆகியோர் எழுதிய "சமூக விஞ்ஞானம்" என்ற நூலில் இருந்து.)

# ஜம்மு - காஷ்மீர் ஜனநாயகப் படுகொலையின் 30 பயங்கர நாட்கள்




**உரிமை முற்றாக பறிக்கப்பட்ட மக்கள்**

ஜம்மு~காஷ்மீர் மாநிலத்தை, ஆகஸ்ட் 5ஆம் தேதி முதல், ராணுவப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சரியாக ஒரு மாதமாகிவிட்டது. ஒரு மாதத்திற்கும் மேலாக காஷ்மீர் மக்களிடமிருந்து அடிப்படை உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். செல்பேசி, தரைவழித் தொலை பேசி, இணையத்தின் மூலம் தொடர்பு கொள்ளுதல் என எவ்விதமான தகவல் தொடர்பும் அவர்களுக்குக் கிடையாது. பிரதான சாலைகள் அனைத்திலும் பாதுகாப்புப் படையினரின் தடுப்பரண்கள் வைக்கப்பட்டிருப்பதாலும், பொதுப் போக்குவரத்து இல்லாததாலும் மக்கள் தங்கள் இல்லங்களிலிருந்து எங்கும் செல்வதற்கான உரிமை பறிக்கப்பட்டவர்களாக இருந்து வருகிறார்கள்.

**பத்திரிகைகள் இயங்க முடியவில்லை**

அரசு ஊழியர்கள் தங்கள் அலுவலகங்களுக்கு வரமுடியாத சூழ்நிலை இருப்பதால் அரசு அலுவலகங்கள் செயல்படவில்லை. செய்தித்தாள்கள் தங்கள் பதிப்புகளை வெளியிட முடியவில்லை. தகவல் தொடர்பு சாதனங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் ஊடகவியலாளர்களால் தங்கள் செய்தி நிறுவனங்களுக்கு முறையாக செய்திகளை அனுப்ப முடியாததே இதற்குக் காரணமாகும்.

**வாயைத் திறந்தாலே சிறை**

மாநிலத்தின் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தடுப்புக்காவலில் தொடர்ந்து வைக்கப்பட்டிருக் கிறார்கள். அனைத்து ஹூரியத் இயக்கத் தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். காஷ்மீர் பள்ளத்தாக்கின் உண்மை நிலைமைகள் குறித்து எவரேனும் வாய்திறந்தால் அவரும் தடுப்புக் காவலில் வைக்கப்படுகிறார். மக்களுக்கு மருத்துவ சேவை செய்திட மருந்துகள் கிடைக்கவில்லை என்று ஒரு மருத்துவர் தன் கவலையைத் தெரிவித்தபோது அவரும் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டிருக்கிறார். கடந்த 30 நாட்களில் கொடூரமான, பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 250க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**அரசு அறிவிப்பின் போலித்தனம்**

ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பதாக அரசாங்கத்தின் தரப்பில் கூறப்படுகிறது. எனினும் எதார்த்த நிலையில் எவ்வித வேறுபாடும் இல்லை. தரைவழித் தொலைபேசி இணைப்புகள் சரிசெய்யப்பட்டு விட்டன என்று அதிகாரிகள் கூறிவந்தபோதிலும், மாநிலத்தின் பல இடங்களில் அவை வேலை செய்யவில்லை. இரண்டு வாரங்களுக்கு முன்பு பத்தாம் வகுப்புவரையிலும் உள்ள பள்ளிக்கூடங்கள் அனைத்தும் திறக்கப்பட்டுவிட்டன என்று அரசுத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. ஆனாலும், மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வருவது என்பது அநேகமாக இல்லை. மக்கள் மருத்துவமனைகளுக்கு செல்ல முடியவில்லை. ஜம்மு–காஷ்மீர் மாநிலம் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தபின், கடந்த ஒரு மாத காலத்தில் ஆயுஷ்மான் பாரத் தேசிய சுகாதார இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் ஒருவர் கூட் பயன்பெறவில்லை என்று அரசாங்கத்தின தரப்பில் அளிக்கப்பட்டுள்ள மருத்துவ அறிக்கையிலிருந்தே அங்குள்ள பரிதாப நிலையை நன்கு தெரிந்துகொள்ள முடியும். எகனாமிக் டைம்ஸ் நாளேட்டில் ஆகஸ்ட் 29 அன்று வெளியான ஒரு செய்தியின்படி, ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் 14 லட்சம் இ–கார்டுகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன என்றும், இதில் ஆகஸ்ட் 5 வரை 22 ஆயிரம் பேர் மருத்துவ சிகிச்சை பெற்றிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது. எனினும், மாநிலம், பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட பின்னர், மூன்று வாரங்களில், இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்ட நோயாளிகள் எண்ணிக்கை என்பது “அநேகமாக பூஜ்யம்” ஆகக் குறைந்துவிட்டது.

**இழுத்துச் செல்லப்படும் இளைஞர்கள்**

இப்போது அம்மாநிலத்தில் புதியதொரு போக்கு உருவாகி இருக்கிறது. வீடுகளிலிருந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, இழுத்துச் செல்லப்படுகிறார்கள். அவர்கள் ஏன் கைது செய்யப்படுகிறார்கள் என்பதற்கான காரணம் எதையும் குடும்பத்தினருக்குக் கூறுவதில்லை. கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்களை எங்கே

வைத்திருக்கிறார் கள் என்பதும் தெரிவிக்கப்படுவதில்லை. இது, குடும்பங்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

**பாய்ந்து செல்லும் பெல்லட் குண்டுகள்**

வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின்னர், சௌராவில் நடைபெற்றதுபோன்று கிளர்ச்சிகள் எங்கேனும் நடைபெற்றால், அவை மிகவும் கொடூரமானமுறையில் பெல்லட் குண்டுகளைப் பயன்படுத்தி நசுக்கப்படு கின்றன. அரசுத் தரப்பில் மூடி மறைத்த போதிலும், பெல்லட் குண்டுகளால் காயம் அடைந்த இளைஞர்கள் மருத்துவமனை களில் சிகிச்சைகள் பெற்றுவரும் தகவல்கள் செய்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. பெல்லட்குண்டு காயங்களினால் ஏற்பட்ட முதல் மரணம் குறித்து செப்டம்பர் 3 அன்று பிடிஐ செய்தி நிறுவனத்தால் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. சௌராவில் நடைபெற்ற சம்பவத்தில் காயங்கள் அடைந்த அஸ்ரார் அகமது கான் என்பவர் மரணம் அடைந்துள்ளார்.

**உச்சநீதிமன்றம் வேடிக்கை பார்ப்பது ஏன்?**

காஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழும் குடிமக்களைப் பொறுத்தவரைக்கும் அரசமைப்புச் சட்டத்தின் 19 மற்றும் 21ஆவது பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும் நசுக்கப்பட்டிருக்கின்றன. இதில் மிகவும் கவலை தரும் விஷயம் என்னவென்றால், ஜம்மு–காஷ்மீர் மாநில மக்களின் உரிமைகளைப் பாதுகாத்திடத் தலையிடுவது தன் வேலையல்ல என்கிற முறையில் உச்சநீதிமன்றம் நினைத்துக் கொண்டிருப்பதாகும். இது தொடர்பாக எண்ணற்ற மனுக்கள் அதனிடம் தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதிலும் அவற்றின்மீது உரிய நடவடிக்கைகள் எதுவும் உச்சநீதிமன்றத்தால் இதுவரை எடுக்கப்படவில்லை.

**நமது ஜனநாயகம் வெறுமையானதா?**

ஒவ்வொருநாள் கடக்கும்போதும், காஷ்மீர் மக்களின் மீதான ஒடுக்குமுறைகளும், அவர்கள் காவலில் அடைத்து வைக்கப்பட்டிருத்தலும், நம் ஜனநாயகம் என்பது எந்த அளவிற்கு அடிப்படை ஏதும் இல்லாத வெறுமையான ஒன்று என்பதை வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டிருக்கிறது. காஷ்மீரில் இன்று நடைபெற்றுள்ள நிகழ்வுகள், இந்துத்துவா எதேச்சாதிகாரத்தின் கீழ், நாட்டின் இதர பகுதிகளில் நாளை நடக்கும் என்பதற்கான பயங்கர எச்சரிக்கையாகும். ஜனநாயகம் மற்றும் ஜனநாயக உரிமைகள் மீதான இக்கொடூரமான தாக்குதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். காஷ்மீர் மக்கள் பாதுகாப்புப் படையினரின் காவல் அடைப்பின்கீழ் வைக்கப்பட்டிருத்தல் உடனடியாக நீக்கப்பட வேண்டும். தகவல் தொடர்பு சாதனங்கள் மீண்டும் இயக்கப்பட வேண்டும். பொதுப் போக்குவரத்து மற்றும் பொது சேவைகள் மீளவும் இயக்கப்பட வேண்டும். அனைத்து அரசியல் மற்றும் அனைத்து சமூக இயக்கங்களின் தலைவர்களும், முன்னணி ஊழியர்களும் நிபந்தனை எதுவுமின்றி விடுவிக்கப்பட வேண்டும்.

**நன்றி: தீக்கதிர், 07.09.2019**

---

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

இருக்கமாட்டார்கள். இதனால் அவர்கள் வெற்றிலை விலை உயர்வு பற்றி குறைகூற ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களது முறைப்பாட்டைக் கேட்ட ரணில், "வெற்றிலைக்குப் பதிலாக சுவிங்கத்தைச் சாப்பிடுங்கள்" என ஆலோசனை கூறினார்!

அதேபோல, ஒருமுறை அரிசி விலை அதிகரித்து மக்கள் அதை வாங்கச் சிரமப்பட்டபோது, "சோற்றுக்குப் பதிலாக பாணைச் சாப்பிடுங்கள்" என ரணில் ஆலோசனை கூறினார்!!

அவரது இந்த ஆலோசனை பிரான்ஸை ஆட்சி செய்த 14ஆம் லூயி மன்னனின் மனைவி சொன்னதைத்தான் ஞாபகப்படுத்தியது. அங்கு மக்கள் பாண் வாங்கிச்சாப்பிட வழியில்லாது தவித்த போது, மன்னன் லூயியின் மனைவி மக்களைப் பார்த்து, "பாண் வாங்க வசதியில்லாதுவிட்டால் கேக் வாங்கிச் சாப்பிடுங்கள்" என்று சொன்னாளாம். (பிரெஞ்சு புரட்சியின் போது மன்னனையும் மனைவியையும் கொன்ற புரட்சிவாதிகள், மன்னனின் மனைவியின் கழுத்தை வெட்டியபோது, "கேக் போல இருக்கிறது" என்று சொன்னதாக ஒரு கதை உண்டு)

சஜித்தைப் பொறுத்தவரை தனது தகப்பனார் ஆர்.பிரேமதாச போல கீழ்மட்ட மக்களுடன் நெருங்கிப் பழகுபவர். அவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானதும் இலங்கையின் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான அம்பாந்தோட்டையில் இருந்துதான். அதன் காரணமாக அவருக்கு அடிமட்ட மக்களின் பிரச்சினைகள் ஓரளவு விளங்கும்.

ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையிலான முரண்பாடு பிரதானமாக அதிகாரப் போட்டியே. ஏனெனில் சஜித் ஜனாதிபதியாகத் தெரிவானால் ஐ.தே.க. தலைமைப் பதவியும் இயல்பாக அவரையே சென்றடையும். அதன்பின்னர் ரணிலுக்கு அரசிலோ கட்சியிலோ எந்த அதிகாரமும் இல்லாமல் போய்விடும். சஜித் வைப்பதே சட்டமாக இருக்கும். சஜித் வழமையாக ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் சொல்வது போல தான் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் எனக் கூறவில்லை. எனவே அவர் அதிகாரத்துக்கு வந்தால் நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி தன்னை அரசியலிலிருந்தே ஓரம்கட்டி விடுவார் என்ற பயமும் ரணிலுக்கு இருக்கிறது.

இருவருக்குமிடையான போட்டியில் அதிகாரத்தை விட சாதிப் பிரச்சினையும் இருக்கிறது. ரணிலோடு ஒப்பிடுகையில் சஜித் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்.

1990இல் ஏறத்தாழ இதுபோன்ற ஒரு பிரச்சினையைத்தான் சஜித்தின் தந்தை ஆர்.பிரேமதாசவும் எதிர்நோக்கினார். 1977 முதல் 13 வருடங்களாக அதிகாரத்தில் இருந்த ரணிலின் மாமனாரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என்றபடியால் 1990இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வேறு ஒருவரை நிறுத்த வேண்டிய நிலையில் இருந்தார். தனக்கு அடுத்த நிலையில் பிரதமராக இருந்த ஆர்.பிரேமதாசவை நியமிப்பதற்கு ஜே.ஆருக்கு விருப்பமில்லை. ஆனால் பிரேமதாசவுக்கு கட்சி அடிமட்டத் தொண்டர்களிடம் இருந்த செல்வாக்கு காரணமாகவும், அவருக்கு இருந்த அடியாட்கள் ஆதரவு காரணமாகவும் இறுதியில் ஜே.ஆர்., பிரேமதாசவுக்கு வழிவிட்டு ஒதுங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இன்றும் அதே நிலைமைதான் தோன்றியுள்ளது. ஜே.ஆரின் மருமகன் ரணில் விக்கிரமசிங்க, ஆர்.பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாசவுக்கு சந்தர்ப்பம் வழங்க விரும்பாமல் முரண்டு பிடிக்கிறார். ஒருவேளை பலரின் நிர்ப்பந்தம் காரணமாக (வெளிநாட்டு சக்திகள் உட்பட) ரணில் தமது கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளராக சஜித்தை நியமிக்க சம்மதித்தாலும், எதிரணியால் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்குக்கு முன்னால் அவரால் ஈடுகொடுக்க முடியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**முன்பக்கத் தொடர்ச்சி...**

தலைதூக்க முற்படுவது எந்தவொரு நாட்டிலும் இயல்பானது. அதுமட்டுமல்லாது, யுத்த கலாச்சாரத்தமால் பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பாக இளைஞர்கள், யுத்தம் முடிவடைந்தாலும் அந்தப் பாதிப்பிலிருந்து விடுபட ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கும்.

இதற்கு ஒரு உதாரணம், வடக்கில் உருவாகியுள்ள 'ஆவா குழு' எனப்படும் ஒரு வன்முறைக்குழுவின் தோற்றமும், ஏனைய சிறுசிறு வன்முறைக் குழுக்களின் தோற்றமும் ஆகும்.

அரசாங்கம் யுத்தம் முடிவடைந்து 10 வருடங்கள் ஆனபின்பும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காணாமல் இழுத்தடித்து வருவதின் காரணமாக வடக்கு கிழக்கில் மட்டுமின்றி, முழு நாட்டிலும் அரசியல் உறுதியற்ற தன்மை நிலவி வருகின்றது.

இதன் காரணமாக குறிப்பாக இலங்கையின் வட பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களை சில தீய சக்திகள் தவறான வழியில் இழுத்துச் செல்ல முற்படுவதைக் காண முடிகிறது.

காணாமல் போனோரைக் கண்டு பிடிக்கும் போராட்டம், சிறையில் உள்ள தமிழ் பயங்கரவாத சந்தேக நபர்களை விடுவிக்கும் போராட்டம், இராணுவம் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்கும் போராட்டம், தமிழ் பகுதிகளில் பௌத்த வழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்கெதிரான போராட்டம், இப்படியாகப் பல போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இந்தப் போராட்டங்களின் போது அப்பாவிப் பொதுமக்கள் அமெரிக்க, ஐரோப்பிய யூனியன் கொடிகளை ஏந்த வைக்கப்பட்டுள்ளனர். தேசிய ஒடுக்குமுறைக்கு பல ஆண்டுகளாக உள்ளாக்கப்பட்ட ஒரு மக்கள், உலகம் முழுவதும் காலனியாதிக்கத்தையும், சுரண்டலையும் மேற்கொண்ட ஏகாதிபத்திய சக்திகளின் கொடிகளைத் தாங்கி நிற்பது என்பது அந்த மக்கள் திட்டமிட்ட முறையில் திசை மாற்றப்பட்டுள்ளதையே எடுத்துக் காட்டுகின்றது. இதற்கெல்லாம் அத்திபாரமாக அமைந்தது 2015 ஜனவரி 8இல் அமைந்த ஆட்சி மாற்றமே. அந்த ஆட்சி மாற்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற தமிழ் தலைமைக்கும் பாரிய பங்கு இருந்தது. அந்த தலைமை கடந்த நான்கு வருடங்களாக பொதுவாக நாட்டுக்கும், குறிப்பாக தமிழ் மக்களுக்கும் பாரிய நாசம் விளைவிக்கும் இன்றைய அரசாங்கத்தை நிபந்தனை எதுவுமின்றி பாதுகாத்து வருகின்றது. இனிமேலும் பாதுகாக்கும் எண்ணத்துடன் இருக்கின்றது. அவர்கள் இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் ஒரு உறுதியான நிலைப்பாடு எடுத்துச் செயல்பட்டிருந்தால் இந்த நிலைமை தோன்றியிருக்காது.

இலங்கை உலக வரைபடத்தில், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கின்றது. அதன் காரணமாக உலக வல்லரசு ஆதிக்கப் போட்டியில் அதன் வகிபாகம் முக்கியத்துவம் உள்ளதாக இருக்கின்றது.

அமெரிக்கா தலைமையிலான உலக வல்லாதிக்க சக்திகள் இலங்கையை தமது செல்வாக்கிற்கு உட்பட்ட ஒரு நாடாக வைத்திருக்கவே எப்பொழுதும் விரும்பி வந்திருக்கின்றன. அதன் காரணமாகவே 1948 பெப்ருவரி 4ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய பிரித்தானிய ஏகாதிபத்தியம் தமக்கு விசுவாசமான பிற்போக்கு ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் இருத்திச் சென்றது.

ஆனால் இலங்கை மக்களின் தேசிய சுதந்திர உணர்வையும், தன்னாதிக்க சிந்தனையையும் புரிந்து கொண்ட எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கி 1956இல் ஐ.தே.கவை தூக்கி எறிந்து ஏகாதிபத்திய விரோத அரசொன்றை நிறுவினார். அன்றிலிருந்து ஆட்சிக்கு வந்த அக்கட்சி தலைமையிலான ஒவ்வொரு அரசும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசுகளாகவே இருந்து வந்துள்ளன.

இதன் காரணமாகவே, ஏகாதிபத்திய சார்பு சக்திகள் 1957இல் பண்டாரநாயக்கவை கொலை செய்தன. அவர் இறந்த பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அவரது மனைவி சிறீமாவே பண்டாரநாயக்கவின் அரசை 1962இல் இராணுவச் சதி மூலம் கவிழ்க்க முயன்றன. பின்னர் 1970இல் பெரும் மக்கள் ஆதரவுடன் உருவான அவரது அரசை 1971இல் ஜே.வி.பி. என்ற எதிர்ப் - புரட்சி இயக்கத்தின் ஆயுதக் கிளர்ச்சி மூலம் கவிழ்க்க முயன்றன. அது தோற்ற பின்னர் 1972 முதல் தமிழ் பிரிவினைவாதிகளின் மூலம் தனித்தமிழ் நாட்டுக்கான போராட்டத்தை முடுக்கிவிட்டனர். அது 30 வருடப் போராக மாறி நாட்டை சின்னாபின்னப்படுத்தியது. அந்தப் போரையும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசே முடிவுக்குக் கொண்டு வந்தது.

அதன் பின்னர் அந்த அரசு நாட்டில் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்தி நாட்டை வளர்ச்சிப் பாதையில் வேகமாக முனனெடுத்துச் செல்கையில், அரசியல் சதி மூலம் 2015இல் அவ்வரசைக் கவிழ்த்து தமக்கு இசைவான அரசொன்றை நிறுவிக் கொண்டன. அதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பை நிர்மூலம் செய்து தமக்கு ஏற்ற சூழலை உருவாக்கி வருகின்றன.

எனவே இன்றைய தேவை நாட்டின் தேசிய சுதந்திரத்தையும், இறைமையையும் பேணக்கூடிய உறுதியான அரசொன்றை மீண்டும் உருவாக்குவதே. அப்படிப்பட்ட ஒரு அரசொன்றை வெறுமனே இராணுவமயமாக்கலின் மூலம் உருவாக்கிவிட முடியாது. அத்தகைய அரசு நாட்டு மக்கள் அனைவரினதும் ஜனநாயக சுதந்திரங்களையும், குறிப்பாக சிறுபான்மை தேசிய இனங்களின் இனத்துவ மற்றும் மத உரிமைகளையும் பாதுகாக்கக்கூடிய அரசாக இருக்க வேண்டும்.

அத்தகைய ஒரு அரசைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின்போது மக்களுக்கு கிடைக்கவிருக்கிறது. அந்த வாய்ப்பை நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, பிரதேச வேறுபாடின்றி பயன்படுத்திக் கொள்வதிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.


---

முதலாளித்துவ பொது நெருக்கடியின் முதல் கட்டம் முதல் உலக யுத்தத்தையடுத்து, குறிப்பாக அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியோடு துவங்கியது. அக்டோபர் புரட்சி தொழிலாளர் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தின் மீது பெரும் செல்வாக்கு செலுத்தியது, சமுதாய வளர்ச்சி முழுவதற்கும் பெரும் உந்து சக்தியை அளித்தது. சோஷலிசம் தத்துவத்திலிருந்து நடைமுறையாகியது, முதலாளித்துவத்தின் தவிர்க்க இயலாத அழிவைப் பற்றியும் அதைப் புதிய சமுதாய அமைப்பால் மாற்றுவதைப் பற்றியும் மார்க்சிய – லெனினியப் போதனை கூறிய ஆரூடத்தின் உண்மை முதன்முதலாக மெய்ப்பிக்கப்பட்டது.

-"சமூக விஞ்ஞானம்" என்ற நூலிலிருந்து

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# ரணில் - சஜித் முரண்பாட்டின் பின்னணி என்ன?




சிறீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஜே.வி.பி. என்பன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான தமது வேட்பாளரகளை அறிவித்துவிட்ட நிலையில், இலங்கையின் பழம்பெரும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இதுவரையும் தனது வேட்பாளரை அறிவிக்காது திண்டாடி வருகிறது. அதற்குக் காரணம் கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் போட்டாபோட்டி என்பது வெட்டவெளிச்சமான விடயம்.

இருப்பினும் தான் எப்படியும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டே தீருவேன் என அறிவித்துள்ள சஜித், தனக்கு ஆதரவாக பொதுக்கூட்டங்களையும் நடத்தி வருகின்றார். ஐ.தே.க. கட்சி தன்னை உத்தியோகபூர்வ வேட்பாளராக நியமிக்காவிட்டால், தான் சுயேச்சையாகத் தன்னும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயாராக இருப்பதாக தனக்கு நெருக்கமானவர்களிடம் சஜித் கூறிவருவதாகச் சொல்லப்படுகிறது.

சஜித்துக்கு ஐ.தே.கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஏறத்தாழ அரைவாசிப் பேர் ஆதரவளித்து வருவதாகச் செய்திகள் வருகின்றன. கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவாக இருப்பதை அவரின் பொதுக்கூட்டங்களுக்கு திரளும் மக்கள் தொகை எடுத்துக்காட்டுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும், மலையகத்தின் சில அரசியல்வாதிகளும் கூட சஜித்துக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லீம் கட்சிகளின் நிலைப்பாடு என்னவென்பது இதுவரை வெளியாகவில்லை.

நிலைமை இவ்வளவு தூரம் வளர்ந்துவிட்ட போதிலும், கட்சித் தலைவர் ரணில் சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கு விருப்பமின்றியே இருந்து வருகின்றார். அவர் மட்டுமின்றி ஐ.தே.கவின் சிரேஸ்ட தலைவர்கள் பலரும் சஜித்தின் நியமனத்தை விரும்பவில்லை எனத் தெரிய வருகிறது.

புனிதன்

ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையிலான முரண்பாடு ஜனாதிபதி தேர்தலை ஒட்டி திடீரென உருவான ஒன்றல்ல. அது பல வருடங்களாக இருந்து வருகிறது. ரணில் தலைமையில் ஐ.தே.க. சுமார் 20 தேர்தல்களில் தோல்வியடைந்த பின்னர், கட்சித் தலைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை கட்சிக்குள் வலுத்தது. அப்பொழுதிருந்தே இந்த முரண்பாடு இருந்து வருகிறது.

ஒரு கட்டத்தில் கரு ஜெயசூரிய ரணிலின் பிரதான போட்டியாளராகக் காணப்பட்டார். அவரை ரணில் தந்திரமாக சபாநாயகர் பதவியில் அமர்த்தி அந்தப் பிரச்சினையை ஓரளவு தணித்துவிட்டார். ஆனால் சஜித் ரணிலுக்கு போட்டியாளராக உருவெடுத்தபோது அதை ரணிலால் தணிக்க முடியவில்லை. சஜித்தை கட்சித் தலைவராக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை படிப்படியாக வளர்ந்து இப்பொழுது அது அவரை ஐ.தே.கவின் உத்தியோகபூர்வ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்ற நிலையை அடைந்துள்ளது.

ரணில், சஜித் இருவரையும் பொறுத்தவரை இது அவர்கள் இருவருக்கும் வாழ்வா, சாவா என்ற பிரச்சினையாகும். ரணில் ஏற்கெனவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோற்றவர். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் அவர் போட்டியிட்டால் வெற்றிபெறமாட்டார் என்பதாலேயே மேற்குலக சக்திகள் சந்திரிகவின் உதவியுடன் மைத்திரிபால சிறிசேனவை சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து உடைத்தெடுத்து அவரைப் பொது வேட்பாளர் ஆக்கியே வெற்றி பெற்றன.

இம்முறை மேற்குலக சக்திகளின் வியூகம் என்னவென்பது தெளிவாகவில்லை. ஆனால் 2015இல் தமக்குச் சாதகமாக ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை எப்படியும் தக்க வைக்கவே அவர்கள் முற்படுவர் என்பது மட்டும் நிச்சயம். அதேநேரத்தில் ஐ.தே.க. சார்பில் ரணில் போட்டியிட்டால் வெற்றிபெறமாட்டார் என்ற சிறுபிள்ளைக்குக்கூட தெரிந்த உண்மை அவர்களுக்கும் தெரியாமல் இருக்காது.

ரணிலையும் சஜித்தையும் பொறுத்தவரை மக்கள் மத்தியில் சஜித்துக்கே ரணிலைவிட செல்வாக்கு அதிகம். ரணில் கொழும்பு நகர மேட்டுக்குடிவாசி. அவருக்கு சாதாரண பொதுமக்களின் பிரச்சினைகள் விளங்குவதில்லை என்பதற்கு இரண்டு உதாரணங்கள் கூறலாம்.

ஒருமுறை இலங்கையில் நோய்த்தாக்கம் காரணமாக வெற்றிலை உற்பத்தி பாதிப்படைந்து வெற்றிலையின் விலை அதிகரித்துவிட்டது. சாதாரண மக்களைப் பொறுத்தவரை ஒருவேளை உணவு இல்லாவிட்டாலும் வெற்றிலை போடாமல்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...